வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com

மலர் : 06 03.02.2025 திங்கட்கிழமை இதழ் : 34 பக்கங்கள் : 12




# ஜெனிவாவுக்கு செல்கின்றது அநுரவின் இராஜதந்திரக் குழு

## மனித உரிமை குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்க அமைச்சர் விஜித ஹேரத் தலைமையில் பயணம்


கொழும்பு, பெப்ரவரி 03

**ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவையின் பொறுப்புக்கூறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான இராஜதந்திர சிறப்புக் குழு எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஜெனிவாவுக்கு விஜயம் செய்கிறது.**

இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட் டுகள் குறித்து விசேட அறிக்கையை இலங்கை தரப்பு சமர்ப்பிக்க உள்ளதுடன், சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாக்க புதிய அரசாங்கம் எடுத்துள்ள நட வடிக்கைகள் தொடர் பான நீண்ட தெளிவுபடுத்தலை முன் வைக்கவும் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி ஆரம்பமாக உள்ள நிலையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்த தீர்மானத்தின் 51/1 நகல் வடிவையும் இலங்கை தொடர்ந்து எதிர்க்கவும், இலங்கையில் இடம் பெற்றதாக கூறப்படுகின்ற போர் குற்றங்கள் குறித்து ஆதாரங்களை சேகரிக்கும் வெளிப்புற பொறி முறைக்கான அதிகாரங்களை

11



# மாவையின் புகழுடல் தீயுடன் சங்கமம்!

யாழ்ப்பாணம், பெப். 03

மறைந்த இலங்கை தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் பூதவுடல் நேற்று தகனம் செய்யப்பட்டது

மாவிட்டபுரத்தில் உள்ள அன்னாரது இல்லத்தில் பொதுமக்கள் அஞ்சலிக்காக அவரது பூதவுடல் வைக்கப் பட்டிருந்த நிலையில் நேற்று இறுதிக்கிரியைகள் நடை பெற்று, மாவிட்டபுரம் தச்சன்காடு இந்து மயானத்தில் அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.

இறுதி நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பிரநிதிநிதியாக ஐக்கிய

11

# கடவுச்சீட்டு அலுவலகத்தை விரைவில் 24 மணி நேரமும் திறக்க நடவடிக்கை!

## ஜனாதிபதி அநுரகுமார உறுதி

கொழும்பு, பெப். 03

தற்போதைக்கு கடவுச் சீட்டு பெறுவதில் நிலவும் நெருக்கடிகளைக் குறைக்கும் வகையில் மிக விரைவில் கடவுச்சீட்டு அலுவலகத்தை 24 மணிநேரமும் திறந்து வைக்கவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உறுதியளித்துள்ளார்.

குருநாகல் - கல்கமுவ பிரதேசத்தில் நடை பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதும் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்த நாட்டில் இன்று ஊழல், மோசடியற்ற ஆட்சியொன்று உருவாக்கப்பட்டுள்ளது.

முதலீட்டாளர்கள் நம்பிக்கையுடன் நாட்டுக்கு

11

# உயர்நீதிமன்ற தீர்ப்பின் அடிப்படையில் உள்ளூராட்சித் தேர்தல் திகதி தீர்மானம்

கொழும்பு, பெப். 03

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பின் அடிப்படையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தும் திகதி தீர்மானிக்கப்பட உள்ளதாக தேர்தல் ஆணைக் குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல். ரத்நாயக்க தெரிவித்தார்.

இந்த தீர்ப்பின் பிரகாரம், அரசாங்கத்தின் நடவடிக்கைகளின் அடிப் படையில் தேர்தல் திகதி தீர்மானிக்கப்பட உள்ளதாக அவர் கூறினார்.

பாராளுமன்றம் எதிர்வரும் 5ஆம் திகதி கூடியதன் பின்னர் சபா நாயகர் தீர்மானத்தை அறிவிப்பார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் கடந்த 2023

11

# உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் மக்கள் ஆதரவுடன் வெல்வோம்!

## சஜித் பிரேமதாஸ சூளுரை

கொழும்பு, பெப். 03

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் மக்கள் ஆதரவுடன் வெற்றி பெறுவோம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

எதிரணியில் இருந்தபோது விவசாயிகளுக்காக குரல் எழுப்பி, நெல்லுக்கான நிர்ணய விலையை தீர்மானிப் போம், அதனைச் சட்டமாக்குவோம் என்று பிரஸ் தாபித்தனர். ஆனால் இன்று அமைச்சர் பதவி களை வகித்துக் கொண்டு உரமானியமாக 25,000

11

# அதானியின் திட்டம் மறு மதிப்பீடு; இரு குழுக்களை நியமித்தது அரசு

கொழும்பு, பெப். 03

இந்திய அதானி குழுமத்தின் காற்றாலை மின்சார ரத் திட்டத்தை மறு மதிப்பீடு செய்ய அமைச்சரவை இரண்டு குழுக்களை நியமித்துள்ளது.

அத்துடன் இந்த குழுக்களின் செயல்பாடுகள் குறித்து சட்ட ஆலோசனைகளும் பெறப்பட்டுள் ளன.

இந்தக் குழுக்கள், திட்டங்கள் தொடர்பில் மதிப் பிடப்பட்ட செலவுகள், சட்ட இணக்கம் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பு அறிக்கைகள்

11

# நட்டத்தில் இயங்கிவரும் 113 அரச நிறுவனங்கள்!

## மறுசீரமைக்க ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு, பெப். 03

நட்டமடைந்து கொண்டிருக்கும் 113 அரச நிறுவனங்களை மறுசீரமைக்க ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கைத்தொழில் அமைச்சின் நிறுவனங்களின் அதிகாரி களுடனான சந்திப்பொன்றில் அமைச்சின் செயலாளர் திலக ஜயசுந்தர இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

அரசாங்க நிறுவனங்களின் செயல்பாடுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்து ஆராய்வதற்காக

11

# தூதுவர்களை மாற்றுகிறது அரசு!

கொழும்பு, பெப். 03

வெளிநாடுகளில் உள்ள இலங்கைத் தூதரகங்களுக்கு நியமிக்கப்பட வேண்டியவர்களின் பெயர்ப் பட்டியலை அரசாங்கம் இறுதி செய்து வருகிறது.

இதன்படி முன்னாள் பிரதம நீதியரசர் ஜயந்த ஜய சூரிய, நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபைக் கான இலங்கையின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதியாக கடமைகளை ஏற்றுக்கொள்ளவுள்ளார்.

முன்னதாக, அந்த பதவியில் இருந்து முன்னாள் பிரதம நீதியரசர் மோகன் பீரிஸ், கடந்த ஆண்டு நவம்பரில் திரும்ப அழைக்கப்பட்டார்.

இலங்கை வெளியுறவுச் சேவையின் தற்போது மூத்த உறுப்பினரான யசோஜா குணசேகர,

11

# கோழி இறைச்சி முட்டையின் விலைகள் வீழ்ச்சி

கொழும்பு, பெப். 03

சந்தையில் முட்டை மற்றும் கோழி இறைச் சியின் விலைகள் கணிச மாகக் குறைந்துள்ள தாக தெரிவிக்கப்படு கின்றது.

இதன்படி, முட் டையின் விலை 24-30

11

# மகிந்தவுக்கு இல்லம் வழங்க அனுமதித்த கூட்டத்தில் அநுர!

## ரணில் வெளியிட்ட பரபரப்பு தகவல்

கொழும்பு, பெப். 03

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு விஜேராம இல்லத்தை வழங்குவதற்கு அனுமதி வழங்கிய கூட்டத்தில் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்கவும் பிரசன்னமாகியிருந்தார் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நல்லாட்சி அரசாங்க ஆட்சிக் காலத்தில் இந்த இல்லத்தை வழங்குவது குறித்த தீர்மானம் எடுக் கப்பட்டதாக அவர் கூறினார்.

11

# முதல் தடவையாக கூடும் கோப் குழு!

கொழும்பு, பெப். 03

கோப் குழு எதிர் வரும் 18 ஆம் திகதி முதல் தடவையாக கூட வுள்ளது.

முதல் நாளில் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதானிக ளுக்கு அழைப்பு விடுக் கப்பட்டுள்ளதாக கோப் குழுவின்

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவை சேனாதிராசாவின் புகழுடல் தீயுடன் சங்கமம்


















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu 03.02.2025 திங்கட்கிழமை
பிலவ வருடம், தை 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ஈழத் தமிழ் அரசியல் முடிவை நோக்கியா?

புதிய அரசியல் யாப்புக்கு தமிழ் மக்கள் வாக்களித்தால் தான் அரசியலிலிருந்து விலகிவிடுவார் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அண்மையில் குறிப்பிட்டிருந்தார் - அதே பொன்னம்பலம் தையிட்டி விகாரை தனியார் காணியில் கட்டப்பட்டுள்ளது, அந்தக் காணியை சொந்தக்காரர்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் - விகாரைக்குரிய காணியில் விகாரையை கட்டுவதில் பிரச்னையில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். யாழ்ப்பாணத்தில் விகாரைக்குரிய காணியில் விகாரை கட்டுவதில் பிரச்னையில்லை என்றால், இப்போது விகாரைக்குரிய காணியாக பல அரச காணிகளை அவர்களால் அடையாளம் காண்பிக்க முடியுமல்லவா! ஏனெனில், கடந்த காலத்தில், வடக்கு, கிழக்கில் பல இடங்களில் புதிதாக விகாரைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அவ்வாறு விகாரைகள் கட்டப்படும் போதெல்லாம் அப்பகுதிக்கு சென்று, எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடும் பிரதான அணியாக, தமிழ்த் தேசிய முன்னணியினரே இருந்திருக்கின்றனர்.


தையிட்டி விகாரை தவிர, வேறு எந்த விகாரைகளும் தனியார் காணியில் கட்டப்படவில்லை - ஒன்றில் முன்னர் விகாரை இருந்ததாக கூறப்படும் இடங்கள் அல்லது ஏதோவொரு வகையில் புத்த தர்மத்தோடும், தொல்பொருள் சான்றுகளோடும் தொடர்புபடுத்தியே அவ்வாறான விகாரைகள் கட்டப்பட்டிருக்கின்றன.

ஆனால், தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழும் பகுதிகளில் எதற்கு புத்தருக்கு சிலைகள் வைக்கப்படுகின்றன - என்னும் கேள்வியின் அடிப்படையிலேயே தமிழ் பகுதிகளில் புதிய விகாரைகள் கட்டப்படுவதை தமிழ் அரசியல் தரப்புக்கள் எதிர்த்து வந்திருக்கின்றன. விகாரைக்குரிய இடங்களில் விகாரைகள் கட்டப்படுவதில் பிரச்னையில்லை என்றால், வரலாற்று ரீதியாக பௌத்த அடையாளத்துக்குரிய அனைத்து இடங்களிலும் கட்டலாம் என்பதுதான் அதன் பொருள். இன்று இவ்வாறு கூறும் பொன்னம்பலம் எதற்காக கடந்த காலத்தில் புத்த விகாரைகள் நிறுவப்படுவதை எதிர்த்து செயல்பட்டிருந்தார்?

விடயங்களை ஆழமாக நோக்கினால் பிரச்னை வேறு என்பதை புரிந்து கொள்ளமுடியும். அண்மைக்காலமாக ஈழத் தமிழ் அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகளும், அரசியல்வாதிகளும் தமிழ்த் தேசிய அரசியலை தொடர முடியாத இக்கட்டான நிலையை அடைந்திருக்கின்றனர். எவரிடமும் தாங்கள் எதை நோக்கிப் போகின்றோம் - தங்களால் முடியுமா என்னும் கேள்விக்கு பதிலில்லாத காரணத்தினாலேயே, அதிகம் தடுமாற்றமான அறிக்கைகளை வெளியிடும் கையறு நிலைக்குள் தள்ளப்பட்டிருக்கின்றனர்.

பிரதான கட்சியாக தங்களை அடையாளப்படுத்தியிருக்கும் இலங்கை தமிழ் அரசுக் கட்சி மீளமுடியாத வாறான சிக்கலுக்குள் மூழ்கியிருக்கின்றது. சில நாடாளுமன்ற உறுப்பினர்களை தவிர அந்தக் கட்சியிடம் எதுவும் இல்லை. மறுபுறம், ஒரு கூட்டணியாக செயல்படும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியோ உள்ளூராட்சித் தேர்தலையாவது வினைத்திறனுடன் எதிர்கொள்ள முடியுமா என்னும் கேள்வியுடன் ஊசலாடிக் கொண்டிருக்கின்றது.

தங்களை தீவிர தமிழ்த் தேசியவாதிகளாக அடையாளப்படுத்திக் கொண்டிருந்த அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் (முன்னணி) கட்சி, கடந்த பதினைந்து வருடங்களாக முயன்றும், வடக்கு, கிழக்கில் தங்களை ஒரு தரப்பாக நிறுவ முடியாத கையறுநிலையில் இருக்கின்றது. இந்த நிலையில்தான் தடுமாற்றமான அறிக்கைகள் வெளிவருகின்றன. இந்த நிலைமை தொடர்ந்தால், தமிழ்த் தேசிய அரசியல் எதிர்காலம் எதிர்பார்ப்பதை விடவும் வேகமாக நீர்த்துப் போகும். இப்போதே தமிழ்த் தேசிய தரப்பு என்று தங்களை அடையாளப்படுத்த முடியாதளவுக்கு அரசியல் நிலைமைகள் மாறிவிட்டன.

## யாழில் நீரிழிவு நோய் குறித்து விழிப்புணர்வு நடைபயணம்

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையும் நீரிழிவுக் கழகமும் இணைந்து நடத்திய நீரிழிவு நோய் குறித்த விழிப்புணர்வு நடைபயணம் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது.

இந்த நடைபயணம் யாழ். போதனா மருத்துவமனையில் இருந்து வைத்தியசாலை வீதி வழியாக சென்று கோவில் வீதியை அடைந்து அதன் வழியாக நல்லூர் சென்று அங்கிருந்து பருத்தித்துறை வீதி வழியாக மீண்டும் வைத்தியசாலை வீதியை வந்தடைந்தது. (எ)

## யாழ். மாவட்ட சுற்றுலா வழிகாட்டி நூல் ஜனாதிபதி அநுரகுமாரவிடம் கையளிப்பு



யாழ்ப்பாணம், பெப்.03

யாழ். மாவட்டத்தின் சுற்றுலா வழிகாட்டி நூல் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தின் கலாசார ரீதியான சுற்றுலாவை மேம்படுத்தும் வகையில், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள சுற்றுலா மையங்கள் தொடர்பில் டிஜிற்றல் அடிப்படையிலான சுற்றுலா வழிகாட்டி நூலானது கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் மற்றும் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோரால் கையளிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பிரதேச செயலக பிரிவுகளையும் உள்ளடக்கிய வகையில் நூற்றுக்கு மேற்பட்ட கலாசார ரீதியான சுற்றுலா மையங்களை உள்ளடக்கி விஞ்ஞான ரீதியான ஆய்வினூடாகவும், களத்தரிசிப்பினூடாகவும் மாவட்ட செயலகத்தால் குறித்த நூல் உருவாக்கப்பட்டுள்ளது. (எ)

## மகோற்சவ பெருவிழாவும் தெய்வீகப் பேருரையும்

யாழ்ப்பாணம், பெப். 03

யாழ்ப்பாணம் வண்ணை மணிக்கூட்டு வீதி அருள்மிகு சிறீ அரசடி விநாயகர் தேவஸ்தான பதின்நான்காவது வருடாந்த மகோற்சவ பெருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10. 15 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளன. சிவாகம கிரியா ஜோதி சிவசிறீ சி. செந்தில் நாதக் குருக்கள் உற்சவப் பெருவிழாவை நிறைவேற்றி வைப்பார். பத்து தினங்களும் இரவு 07. 00 மணிக்கு 'விநாயகரின் பெருமை' எனும் விடயத்தில் தெய்வீகப் பேருரையை மதுரகவி காரை. எம்.பி. அருளானந்தன் நிகழ்த்துவார். (எ)

## கிளிநொச்சியில் கடலாமையுடன் ஒருவர் கைது

கிளிநொச்சி, பெப். 03


கிளிநொச்சி முழங்காவில் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாச்சிக்குடா கடற்கரையில் கடலாமையுடன் ஒருவர் நேற்று முன்தினம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபரை முழங்காவில் பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.


நாச்சிக்குடா பகுதியைச் சேர்ந்த 35 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை முழங்காவில் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
சில காரியங்களை அலைந்து திரிந்து முடிக்க வேண்டி வரும். பிள்ளைகளின் உணர்வுகளைப் புரிந்துக் கொள்ளுங்கள். வாகனம் அடிக்கடி தொந்தரவு தரும். தடைகளை தாண்டி முன்னேறும் நாள்.

**இடபம்**
பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வாகன வசதிப் பெருகும். நெருங்கியவர்களுக்காக மற்றவர்களின் உதவியை நாடுவீர்கள். உத்தியோகத்தில் பாராட்டப்படுவீர்கள்.

**மிதுனம்**
உங்களின் அணுகுமுறையை மற்றவர்களின் ரசனைக்கு ஏற்ப மாற்றியமைத்துக் கொள்வீர்கள். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கடகம்**
கணவன் மனைவிக்குள் அன்னியோன்யம் பிறக்கும். வரவேண்டிய பணம் கைக்கு வரும். உறவினர்கள் உங்களைப் புரிந்துக்கொள்வார்கள். காணாமல்போன முக்கிய ஆவணங்கள்கிடைக்கும்.

**சிம்மம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மனஇறுக்கங்கள் உருவாகும். அதிக வேலைச்சுமையால் அவ்வப்போது கோபப்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களுடன் வளைந்துக் கொடுத்துப் போவது நல்லது.

**கன்னி**
விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். கல்யாண பேச்சு வார்த்தை வெற்றியடையும். சகோதரர்களால் ஆதாயம் அடைவீர்கள். வியாபாரத்தில் அதிரடி மாற்றம் செய்து லாபம் ஈட்டுவீர்கள்.

**துலாம்**
உறவினர், நண்பர்கள் மத்தியில் அந்தஸ்து உயரும். சுபநிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். எதிர்பாராத பணவரவு உண்டு. வியாபாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**விருச்சிகம்**
சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். நட்பு வழியில் நல்ல செய்தி கேட்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். வியாபாரத்தில் புதுவாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**தனுசு**
கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். மகளுக்கு நல்ல வரன் அமையும். தாயாரின் உடல் நலத்தில் கவனம் தேவை. புது வேலை அமையும்.

**மகரம்**
சொத்து வாங்குவது விற்பது லாபகரமாக அமையும். புது வாகனம் வாங்குவீர்கள். குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் கலந்துக் கொள்வீர்கள்.அரசால் ஆதாயம் உண்டு.

**கும்பம்**
கணவன் - மனைவிக்குள் இருந்த மோதல்கள் விலகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். தள்ளிப் போன விஷயங்கள் உடனே முடியும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**மீனம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலரின் விமர்சனங்களுக்கும், கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். நீங்கள் நகைச்சுவைக்காக சொல்ல கூடிய சில கருத்துக்கள் கூட சீரியசாக வாய்ப்பிருக்கிறது.

# நீதிபதி இளஞ்செழியனுக்கு பாராட்டு விழா



வவுனியா, பெப்.03

வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியாக இருந்து ஓய்வு பெற்ற மா. இளஞ்செழியனின் சேவை நலன் பாராட்டு விழா நேற்று முன்தினம் வவுனியாவில் நடைபெற்றது.

வவுனியா சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் தலைமையில், வவுனியா ஈரப் பெரியகுளம் பகுதியில் உள்ள விருந்தினர் விடுதியில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நீதிபதி மா. இளஞ்செழியனின் 27 வருட நீதித்துறை சேவையை பாராட்டி வடக்கு - கிழக்கு பகுதிகளில் இருந்து வருகை தந்த மேல் நீதிமன்ற, மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற நீதிபதிகள், சட்டத்தரணிகள் எனப் பலரும் பாராட்டி கௌரவிப்புகளை வழங்கியிருந்தனர். (எ)

# மருதங்கேணி - பருத்தித்துறை வீதியை உரிய முறையில் புனரமைத்து தாருங்கள்

**மருத்துவமனை பொறுப்பதிகாரி அவசர கோரிக்கை**

வடமராட்சி, பெப். 03

மருதங்கேணி - பருத்தித்துறை வீதியை புனரமைக்குமாறு மருதங்கேணி பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி அவசர கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ். வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச மருத்துவமனையில் போதியளவு மருத்துவ வசதிகள் இல்லாத காரணத்தால் அதிக நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் பருத்தித்துறை ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர்.

மருதங்கேணி - பருத்தித்துறை வீதியானது ஆங்காங்கே சேதமடைந்து காணப்படுகிறது.

இதனால், அவசரமாக சிகிச்சை தேவைப்படும் நோயாளர்களை விரைவில் கொண்டு சேர்க்க முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த வீதி உரிய முறை யில் புனரமைப்பு செய்யப்பட் டால் 15 நிமிடத்தில் பருத்தித் துறை ஆதார மருத்துவமனையை அம்பு லன்ஸ் சென்றடையும். இத னால், நோயாளர்களை பாது காக்கும் சந்தர்ப்பம் அதிகரிக் கும்.

எனவே, மருதங்கேணி - பருத்தித்துறை வீதியை உரிய முறையில் புனரமைத்து தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுப்பதாக மருதங்கேணி பிரதேச மருத்துவமனை பொறுப்பதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

(எ-02)

# உள்ளூர் சேவையில் ஈடுபடும் பஸ்கள் பிரயாண சிட்டை வழங்க வேண்டும்

வடமராட்சி, பெப். 03

வடக்கு மாகாணத்தில் நேற்று முன்தினம் முதலாம் திகதி முதல், நீண்டதூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிகளுக்கு பிரயாண சிட்டை வழங்கப்பட வேண்டும். அதேபோன்று, உள்ளூர் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அடுத்த மாதம் 01. 03. 2025 ஆம் திகதிக்கு முன்னர் பயணச் சிட்டைகள் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வடக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க. மகேஸ்வரன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் திடீர் பரிசோதக உத்தியோகத்தர்கள் ஊடாக சோதனைகள் முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுப் போக்குவரத்தில் ஈடுபடும் பேருந்துகளில் பயணம் செய்யும் பொதுமக்கள் தாங்கள் செலுத்தும் கட்டணங் களின் மீதிப்பணம் தரப்படுவ தில்லை எனவும், கூடுதலான கட்டணம் அறவிடப்படுவ தாகவும் முறைப்பாடுகள் முன் வைத்தமையை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதா கவும் அவர் தெரிவித்தார். (எ-02)

# கயிறு கட்டிய நிலையில் குளத்திலிருந்து முதியவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டது

வடமராட்சி, பெப். 03

உடலில் கயிறு கட்டிய நிலையில் குளத்திலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டது

யாழ். வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்று தெற்கு பகுதியில் நேற்றைய தினம் காலை இவ்வாறு சடலம் மீட்கப்பட்டது.

70 வயது மதிக்கத்தக்க முதியவர் ஒருவரின் சடலமே மீட்கப்பட்டது.

புற்றுநோயால் அவதிப்பட்ட முதியவர் வேதனை தாங்க முடியாமல் உயிரை மாய்த்துக் கொண்டதாக தெரியவருகின்றது. மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-02)



மறைந்த தமிழ் அரசுக் கட்சியின் மூத்த தலைவர் மாவை சேனாதிராசாவின் புகழுடலுக்கு உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கம் சார்பில் அதன் செயலாளர் நாயகம் துரை கணேசலிங்கம் அஞ்சலி செலுத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தல் பிரசாரத்தில் பங்கேற்கமாட்டார் ஜனாதிபதி அநுர?

கொழும்பு, பெப். 03

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் பிரசாரக் கூட்டங்களில் பங்குப்பற்றாமலிருக்க ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தீர்மானித்திருப்பதாக அறிய முடிகிறது.**

ஜனாதிபதி என்ற பொதுவான பதவியில் இருந்து கொண்டு தேர்தல் பிரசார மேடையேறுவது பொருத்தமற்றது என்பதை ஜனாதிபதி ஆளும் தரப்பின் உறுப்பினர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு முன்னர் அனைத்து மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டங்களிலும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் மாவட்ட மட்டத்தில் நடத்தப்படும் பொது மக்கள் கூட்டத்தில் ஜனாதிபதி கலந்துக் கொள்ளவுள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டுக்கு பின்னர் நடத்தப்படும் என்று சபை முதல்வரும், அமைச்சருமான பிமல் ரத்நாயக்க குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல்கள் ( விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் தொடர்பில் உயர்நீதிமன்றத்தின் தீர்மானத்தை அடிப்படையாகக் கொண்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நடைபெறும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளாமலிருக்க ஜனாதிபதி அநுரகுமார தீர்மானித்துள்ளதாக அறிய முடிகிறது. (அ)

# உப தபால் நிலையங்கள் மூடப்படும் அபாய நிலை!

கொழும்பு, பெப். 02

உப தபால் நிலையங்கள் மூடப்படும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளதாக இலங்கை தபால் மற்றும் தொலைத்தொடர்பு சேவைகள் சங்கத்தின் தலைவர் சிந்தக பண்டார தெரிவித்தார்.

அரசாங்கத்தினால் போதிய வசதிகள் வழங்கப்படாமையால் பல அலுவலகங்கள் மூடப்படும் கடுமையான நெருக்கடியை எதிர்நோக்கி வருவதாக பண்டார கூறினார்.

அதேவேளை, நகர்ப்புறங்களில் அமைந்துள்ள துணை தபால் நிலைய கட்டடங்களுக்கு மாத வாடகையாக 1,500 ரூபாயும், கிராமப்புறங்களில் 750 ரூபாயும் அரசால் வழங்கப்படும். இவ்வளவு தொகைக்கு வாடகைக் கட்டடம் கண்டுபிடிக்க முடியாத நிலை உள்ளது எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நீர், மின்சாரக் கட்டணங்களை அதிகாரிகள் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளமையால் இந்த நிலைமை மோசமடைந்துள்ளது.

நாடளாவிய ரீதியில் 3,410 உப தபால் நிலையங்கள் அமைந்துள்ளன. அவற்றில் 3,351 தற்போது இயங்கி வருகின்றன. அதன்படி நாடளாவிய ரீதியில் 59 உப தபால் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.என்றார். (அ)

# மாத்தறை மேல் நீதிமன்ற வளாகத்துக்குள் திருட்டு!

## சந்தேகநபர்கள் ஐவர் கைது

கொழும்பு, பெப். 02

மாத்தறை மேல் நீதிமன்ற வளாகத்தின் கூரையில் இடிதாங்கியில் பொருத்தப்பட்டிருந்த செப்பு பாகங்கள் மற்றும் பல பிரதேசங்களில் தொலைபேசி தொடர்பு கோபுரங்களில் பொருத்தப்பட்டிருந்த இடிதாங்கிகளை களவாடிய குற்றச்சாட்டில் 5 சந்தேகநபர்கள் மாத்தறை வலய குற்ற விசாரணை பணியகத்தால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இடிதாங்கிகளை களவாடி அவற்றிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட 228 கிலோகிராம் செம்பு கம்பிகளும் சந்தேக நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்டுள்ளன.

மாத்தறை மேல் நீதிமன்ற வளாகத்தில் அமைந்துள்ள மின்னல் கடத்திகளில் இருந்து செப்பு கம்பிகள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையின் போது கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டதாக காவல்துறை தெரிவித்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 முதல் 34 வயதுக்குட்பட்ட இமதுவ பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களிடமிருந்து கைபேசிகள், செப்பு கம்பிகளை வெட்டப் பயன்படுத்தப்படும் கருவிகள் என்பன மீட்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் குறித்து மாத்தறை வலய குற்றப் விசாரணை பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது. (அ)

# கிளீன் சிறிலங்கா திட்டத்தை பாடசாலை மட்டத்திலும் முன்னெடுக்கத் தீர்மானம்!

கொழும்பு, பெப். 02

கிளீன் சிறிலங்கா திட்டத்தைப் பாடசாலை மட்டத்திலும் முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

அதற்கமைய, கல்வித்துறையைச் சேர்ந்தவர்களைப் பயிற்றுவிப்பதற்கான நிகழ்ச்சி திட்டம் பிரதமர் ஹரிணி அமரசூரிய தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

சுகாதாரம், கழிவு முகாமைத்துவம், மாணவர்களின் நடத்தை மற்றும் ஒழுக்கம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு குறித்த நிகழ்ச்சி திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. இந்த நிகழ்ச்சித் திட்டத்திற்குத் தேவையான பயிற்சிகள், மாகாணக் கல்விப் பணிப்பா ளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் தெரிவு செய் யப்பட்ட கல்வித் துறை சார் பணியாளர்களுக்கும் வழங்கப் படவுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (அ)

# காட்டு யானைகளின் பிரச்னைக்கு தீர்வாகப் புதிய மின்சார வேலிகள்!

கொழும்பு, பெப். 03

காட்டு யானைகளால் ஏற்படும் பிரச்னைக்குத் தீர்வாக தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையத்தினால் புதிய தொழில்நுட்பத்துடன் கூடிய மின்சார வேலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

திஸ்ஸமஹாராம பகுதியில் இந்த புதிய மின்சார வேலி வைபவ ரீதியாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.

புதிய தொழில்நுட்பத்துடன், குறைந்த செலவில் இந்த மின்சார வேலி, உள்நாட்டு பொறியாளர்களால் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த மின்சார வேலி, எந்த நேரத்தில், உடைந்தாலும், அது கைபேசி செயலி ஒன்றின் ஊடாக குறுஞ்செய்தியாக அறியப்படுத்தும் வசதியை கொண்டுள்ளதாகவும் தேசிய பொறியியல் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

# அபாயம் மிக்க கொள்கலன் விடுவிப்புக்கு அமைச்சரவையே பொறுப்பு கூறவேண்டும்

## நளின் பண்டார கூறுகிறார்

கொழும்பு, பெப். 03

அமைச்சர் பிமல் ரத்நாயக்கவின் அச்சுறுத்தல் காரணமாகவே இலங்கை போக்குவரத்துசபையின் தலைவர் பதவி விலகியுள்ளார். இவ்வாறு தற்போதைய அமைச்சர்களுடன் பணியாற்ற முடியாத நிலையில் ஒவ்வொரு அதிகாரிகளும் பதவி விலகிக் கொண்டிருக்கின்றனர். இந்த வகையிலேயே அதிக அபாயம் மிக்க கொள்கலன்களும் அரசாங்கத்தின் அனுமதியுடன் விடுவிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார குற்றஞ்சுமத்தினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

அதிக அபாயம் மிக்க பொருட்களைக் கொண்ட சிவப்பு முத்திரையிடப்பட்ட 300 இற்கும் மேற்பட்ட கொள்கலன்கள் எவ்வித சோதனையும் இன்றி விடுவிக்கப்பட்டுள்ளன.

ஆளுனர் ஒருவரது பெயர் குறிப்பிடப்பட்டாலும் அவர் அதற்கு மறுப்பு தெரிவித்திருக்கின்றார். அவ்வாறெனில் யாருடைய அனுமதியில் அவை விடுவிக்கப்பட்டன?

வழமையாக துறைமுகத்துக்கு வரும் கொள்கலன்களில் 35 சதவீதமானவை மாத்திரமே பரிசோதிக்கப்படும். கிரீன் செனல் நிறுவனம் உள்ளிட்டவற்றின் கொள்கலன்கள் பரிசோதிக்கப்படுவதில்லை.

ஆனால் இம்முறை அபாயம் மிக்கவை என குறிப்பிடப்பட்டிருந்த கொள்கலன்கள் மாத்திரம் விடுவிக்கப்பட்டுள்ளதன் பின்னணியில் உள்ள சதித்திட்டம் என்ன?

எனவே சுங்க அதிகாரிகளும் அங்குமிங்கும் பந்தினை கைமாற்றிக் கொண்டிருப்பதில் பலன் இல்லை. இங்கு தவறு அரசாங்கத்தின் மீதே காணப்படுகிறது.

விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் உட்பட முழு அமைச்சரவையும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். அதேபோன்று அவற்றில் காணப்பட்ட பொருட்கள் என்ன என்பதையும் நாட்டுக்கு வெளிப்படுத்தவேண்டும்.



இந்த அமைச்சர்களுடன் பணியாற்ற முடியாமல் அதிகாரிகள் அடுத்தடுத்து பதவி விலகிக் கொண்டிருக்கின்றனர்.

போக்குவரத்துசபை தலைவருக்கு அமைச்சர் பிமல் ரத்நாயக்க அச்சுறுத்தல் விடுத்து அவரை பதவி விலகச் செய்ததாகவே எமக்கு தகவல்கள் கிடைத்துள்ளன.

எனவே பாராளுமன்றத்தில் அனைத்துக்கும் எழுந்து விவாதிப்பதைப் போன்று இதற்கான காரணத்தையும் நாட்டுக்கு வெளிப்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்-என்றார். (அ)

# விசேட தேவையுடைய சமூகத்தின் பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு

## சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 02

விசேட தேவையுடைய சமூகத்தினரின் பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பாராளுமன்றத்தில் குழுவொன்றை உருவாக்குவதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தெரிவித்தார்.

விசேட தேவையுடையோரின் அமைப்புக்களின் ஒன்றியத்துடனான சந்திப்பின்போது, சபாநாயகர் இதனைக் குறிப்பிட்டதாக பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதன்போது, விசேட தேவையுடையவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கும் பிரச்னைகள் குறித்தும் அவதானம் செலுத்தப்பட்டதுடன் அவர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு சுயாதீன ஆணைக்குழு ஒன்று நிறுவப்படவேண்டியதன் அவசியமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



இதேவேளை, சைகை மொழியைத் தேசிய மொழியாக்கும் சட்டமூலம் விரைவாக நிறைவேற்றப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் விசேட தேவையுடைய அமைப்புகளின் ஒன்றியத்தினது உறுப்பினர்களால் இதன்போது சபாநாயகரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதாகவும் பாராளுமன்ற தொடர்பாடல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாயில் படுக்க சொன்னார்கள் சோறும் சம்பலும் தந்தார்கள்!

## யோசித ராஜபக்ஷ வெளியிட்ட தகவல்

கொழும்பு, பெப். 02

**முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகன் யோஷித ராஜபக்ஷ தன்னை தடுத்துவைத்திருந்தவேளை பாயில் உறங்கச் சொன்னார்கள். தேங்காய் சம்பலும் சோறும் தந்தார்கள் என தெரிவித்துள்ளார்.**

இது குறித்து யோஷித ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாவது-அன்றைய தினம் சனிக்கிழமை நான் வீட்டிலிருக்கவில்லை.எனது குடும்பத்தினரும் வீட்டில் இருக்கவில்லை. இதனால் எனது வீடு பூட்டியிருந்தது.

நான் பெலியத்தை இடமாறும் பகுதிக்கு அருகில் சென்றவேளை போக்குவரத்து பொலிஸை சேர்ந்த ஒருவர் எனது வாகனத்தை மறித்தார். முதலில் அவர் எனது வாகனப் பதிவு குறித்த ஆவணங்களைச் சோதனையிட்டார்.காப்புறுதி, வாகனச் சாரதி அனுமதிப்பத்திரம் போன்றவற்றையும் அவர் சோதனையிட்டார்.

என்னை தடுத்து நிறுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டதாக அவர் தெரிவித்தார். சி.ஐ.டியினர் அந்த பகுதிக்கு வரும்வரை என்னை அங்கேயே இருக்குமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

அவர்கள் என்னை விசாரிக்கவுள்ளனர் என அவர் தெரிவித்தார்.அங்கிருந்த அலுவலகத்தின் ஆசனத்தின் அமர்ந்திருக்குமாறு என்னை அவர் கேட்டுக்கொண்டார்

நான் பெலியத்தையில் உள்ள வீட்டுக்கு சென்று அங்கு காத்திருக்கின்றேன் என அவரிடம் தெரிவித்தேன்.

ஆனால் அவர் பணிவான முறையில் அதனை ஏற்கமறுத்துவிட்டார்.

நான் எனது ஆதரவாளரின் திருமண வீட்டுக்கு சென்றுகொண்டிருந்தேன். நான் அவரை தொலைபேசியில் தொடர்புகொண்டு என்னால் திருமண நிகழ்வில் கலந்துகொள்ள முடியாது என தெரிவித்தேன்.

என்னை தடுத்து நிறுத்துவார்கள் என்பது எனக்கு தெரியாத போதிலும், எனது வீட்டிலிருந்து நான் அதிவேக வீதியை நோக்கி பயணித்த ஆரம்பித்த தருணத்திலிருந்து இருவர் மோட்டார் சைக்கிளில் என்னை பின்தொடர்கின்றார்கள் என்பது எனக்கு தெரிந்திருந்தது.

சி.ஐ.டியினர் அங்கு வந்து சேர்ந்ததும் அவர்கள் என்னை தங்களது வாகனத்துக்கு வருமாறு அவர்கள் உத்தரவிட்டனர். அதன் பின்னர் கொழும்பிலுள்ள சி.ஐ.டி தலைமையகத்துக்கு புறப்பட்டோம் -இந்த பயணம் மூன்றரை மணித்தியாலங்கள் நீடித்தது.

ஐந்தரை மணியளவில் அவர்கள் என்னிடம் சிறு வாக்குமூலமொன்றை பதிவு செய்து



விட்டு கொழும்பு மேலதிக நீதவானின் இல்லத்துக்கு கொண்டு சென்றனர்.என்னை தடுத்துவைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.-என்றார். (அ)

# மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை பலி!

கொழும்பு, பெப். 02

மகனின் தாக்குதலுக்கு இலக்காகி தந்தை ஒருவர் உயிரிழந்த சம்பவம் உடப்பு பொலிஸ் பிரிவின் பெரியகொலனி பகுதியில் பதிவாகியுள்ளது.

உயிரிழந்தவர் உடப்பு, ஆடிமுனை பகுதியைச் சேர்ந்த 63 வயதான நபர் என தெரியவந்துள்ளது.

பெரியகொலனி பகுதியில் உள்ள வீடொன்றில் தங்கியிருந்த ஒருவர், உடல்நலக்குறைவு காரணமாக உடப்பு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் இறந்துவிட்டதாக உடப்பு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

உடலைப் பரிசோதித்த சட்டவைத்திய அதிகாரி, இது சந்தேகத்திற்கிடமான மரணம் என்றும், நீதவான் விசாரணை தேவை என்றும் அறிவித்துள்ளார்.

அதன்படி, முன்னெடுத்த விசாரணையில், இந்த மரணம் ஒரு கொலை என்றும், தந்தை உறங்கிக்கொண்டிருந்தபோது மகன் தந்தையின் மார்பில் கத்தியால் குத்தியுள்ளமையும் தெரியவந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் இறந்தவரின் மகன் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பதும், அன்று அவரது சிகிச்சைகாக தந்தை வராததால் ஏற்பட்ட கோபத்தில் தந்தையை அவர் கத்தியால் குத்தியதாகவும் தெரியவந்தது.

சடலம் புத்தளம் மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன், குற்றத்தைச் செய்த சந்தேக நபரான 20 வயதான மனநலம் பாதிக்கப்பட்ட மகன் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# ஜப்பானிய வாகனங்களின் விலைகள் அதிகரிப்புக்கு 2ஆண்டு பழமையான வாகன இறக்குமதியே காரணம்

கொழும்பு, பெப். 02

ஜப்பானிய வாகனங்களின் விலை அதிகரிப்பிற்கான பிரதான காரணம், அந்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 5 அல்லது 7 ஆண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பதிலாக 2 ஆண்டுகள் பழமையான வாகனங்களை இறக்குமதி செய்ய அரசாங்கம் முடிவு செய்ததே என்று இலங்கை வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக சம்பத் மெரெஞ்சிகே தெரிவித்தார்.

இறக்குமதி கட்டுப்பாடுகளை நீக்கி, நேற்று முதல் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அரசாங்கத்தின் முடிவு குறித்து கருத்து தெரிவிக்கும் போதே மெரென்சிகே இந்தக் கருத்தை வெளியிட்டார்.

அரசாங்கத்தின் இந்த முடிவால், இந்த நாட்டின் ஒரு சாதாரண குடிமகனால் ஒரு கோடி ரூபாய்க்குக் குறைவாக வாகனத்தை கொள்வனவு முடியாது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

"இறுதியில் என்ன நடக்கும் என்றால், நாட்டின் சாதாரண குடிமகனால் வாகனத்தை வாங்க முடியாத நிலை ஏற்ப டும்.

இது சுமார் 5 ஆண்டுகளுக்கு செய்யப்பட்டிருந்தால் சுமார் 6 மில்லியன் முதல் 6.5 மில்லியன் ரூபாய்க்கு வாகனத்தை வாங்கியிருக்கலாம். ஆனால் அது இன்று இல்லாமல் போயுள்ளது" -என்றார்.

உற்பத்தி செய்யப்பட்ட ஆண்டிலிருந்து 2 ஆண்டுகளில் ஜப்பானிய வாகனங்களின் தற்போதைய ஏல விலை மற்றும் அது இந்நாட்டின் வரிகளுடன் சேர்க்கும் போது வாகனங்களின் விலைகள் அதிகரிக்கும் விதம் பற்றி மெரென்சிகே விளக்கினார். (அ)

# சிக்குன்குனியா பரவும் அபாயம்!

கொழும்பு, பெப். 02

நாடளாவிய ரீதியில் குழந்தைகள் மற்றும் முதியவர்கள் மத்தியில் சிக்குன்குனியா அறிகுறிகளுடன் காய்ச்சல் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

காய்ச்சல், மூட்டுவலி, உடல்வலி, மூக்கைச் சுற்றி கறுப்பு நிறமாற்றம் போன்றவை சிக்குன்குனியாவின் அறிகுறிகளாக இருக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் இதுபோன்ற அறிகுறிகள் தொடர்ந்தால் விரைவில் மருத்துவமனைக்குச் சென்று தேவையான சிகிச்சையை பெற வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

டெங்குவை பரப்பும் அதே நுளப்புதான் சிக்குன்குனியாவையும் பரப்புகிறது.எனவே நுளப்புகள் பெருகும் இடங்களை அழிப்பது மிகவும் அவசியம் என்றும் நிபுணர் குறிப்பிட்டார். (அ)

# தோல்வியடைந்த அரசியல்வாதிகள் அரசுக்கு எதிராகப் போலி பிரசாரம்!

கொழும்பு, பெப். 03

தோல்வியடைந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் அரசாங்கத்துக்கு எதிராக போலியான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர். இதற்காக நாம் ஒருபோதும் பின்வாங்கப் போவதில்லை.எமக்கு வழங்கப்பட்ட மக்களாணையின் நோக்கத்தை நாம் ஆழமாக புரிந்துகொண்டுள்ளோம் அதற்கேற்பவே நாம் செயற்படுவோம் என பொதுமக்கள் பாதுகாப்பு மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கல்கமுவ மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-நாம் அரசாங்கத்தை பொறுப்பேற்று 70 நாட்கள் கடந்துள்ளன. இந்த காலப்பகுதியில் நாம் என்ன செய்துள்ளோம். இந்த நாட்டு மக்களுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தங்களையும் நாம் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளையும் அந்த மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றவும் நாம் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனை செய்ய வேண்டிய பொறுப்பும் கடமையும் எமக்குள்ளது. இதனை நாம் கட்டம் கட்டமாக நிறைவேற்றுவோம்.

ஏழ்மை நிலையில் இருந்து இந்த மக்களை மீட்க வேண்டும். அவர்களுக்கு வளமான வாழ்க்கை பெற்றுக்கொடுக்க வேண்டும். இந்த பகுதியில் காட்டு யானைகள் அச்சுறுத்தல் உள்ளது. அரசாங்கம் என்ற வகையில் யானை- மனித மோதல் தொடர்பில் தீர்வு காண நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எம்மிடம் தெளிவான திட்டம், நோக்கம் உள்ளது. வேலைத்திட்டம் மற்றும் திட்ட வரைவும் உள்ளது. மக்களுடன் இணைந்து இந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண நாம் நடவடிக்கை எடுப்போம். இதுவே எமது இலக்கு. அதற்காக நாம் அர்ப்பணிப்புடன் செயற்படுவோம்.

இந்த மக்கள் பெற்றுத் தந்த அந்த மக்களா ணையை எதிர்பார்ப்பையே தற்போது நாம் நிறைவேற்றிக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் தேர்தலில் தோல்வியடைந்த சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் அரசாங்கத்துக்கு எதிராக போலியான பிரசாரங்களை முன்னெடுத்துள்ளனர். என்றார். (அ)

# தொலைத்தொடர்பு கம்பி திருடி விற்ற ஐவர் கைது!

கொழும்பு, பெப். 02

தொலைத்தொடர்பு கம்பிகள் திருடப்பட்டமை தொடர்பில் கொடவில பொலிஸ் நிலையத்தில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் அடிப்படையில், மாத்தறை, இமதுவ பிரதேசத்தில் வைத்து ஐவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் 23 மற்றும் 34 வயதுக்கு இடைப்பட்ட இமதுவ பிரதேசத்தை சேர்ந்தவர்கள் ஆவர்.

சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விசாரணைகளின் போது, மாத்தறை, மாலிம்பட, அக்குரஸ்ஸ, நெலுவ, இமதுவ, வெலிகம, யக்கலமுல்ல, ஊறுபொக்க, அம்பலாங்கொட மற்றும் அஹங்கம ஆகிய பொலிஸ் பிரிவுகளில் உள்ள தொலைபேசி தொடர்பாடல் கோபுரங்களில் பொருத்தப்பட்டுள்ள தொலைத்தொடர்பு கம்பிகளை இவர்கள் திருடியுள்ளதாக தெரியவந்துள்ளது.

திருடப்பட்ட தொலைத் தொடர்பு கம்பிகளில் இருந்து பெறப்பட்ட 228 கிலோ செப்பு வெவ்வேறு இடங்களுக்கு விற்பனை செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் கம்பிகளை வெட்டுவதற்கு பயன்படுத்தப்படும் குறடு, மோட்டார் சைக்கிள் மற்றும் 05 கையடக்கத் தொலைபேசிகள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.இதனையடுத்து, கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக மாத்தறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை மாத்தறை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்து வரும் பாலியல் நோய்கள்

## வைத்தியர்கள் எச்சரிக்கை

கொழும்பு, பெப். 02

**நாட்டின் இளைஞர்களிடையே எச்.ஐ.வி மற்றும் பாலியல் நோய்கள் அதிகரித்து வருவதாக சமூக மருத்துவ நிபுணர்கள் சங்கத்தின் வைத்திய நிபுணர் விந்தியா குமாரப்பெலி சுட்டிக் காட்டினார்.**

கொழும்பு விஜேராமாவில் உள்ள இலங்கை மருத்துவர் சங்கக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் இந்த விடயத்தில் அதிக ஆபத்தில் உள்ளனர். இதனால் பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் பாதுகாப்பற்ற கர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

மேலும் இந்நிலைக்கு சமூக ஊடகங்களின் பயன்பாடும் ஒரு காரணம். தற்போது இளைஞர்கள் மத்தியில் டேட்டிங் பயன்பாடுகள் பரவலாகக் காணப்படுகின்றன.

அது மட்டுமல்லாமல், சிலர் மது மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை நாடியுள்ளனர். இது போன்ற காரணங்களால், பாலியல் ரீதியாக பரவும் நோய்கள் மற்றும் எச்.ஐ.வி போன்ற வைரஸ்கள் மற்றும் பாதுகாப்பற்ற கர்ப்பங்கள் ஏற்படுகின்றன-என்றார். (அ)

# வீதி விபத்துக்களால் 12,182 பேர் உயிரிழப்பு

கொழும்பு, பெப். 02

நாடளாவிய ரீதியாக கடந்த 5 வருடங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களால் 12,182 பேர் உயிரிழந்ததாக பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மனோஜ் ரணகல தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதேவேளை, இவ்வாறான வீதி விபத்துக்களில் 5 தொடக்கம் 29 வயதுகளுக்கு இடைப்பட்டவர்களே அதிகளவில் பாதிக்கப்படுவதாக குறித்த ஊடக சந்திப்பில் பங்கேற்றிருந்த இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் சுரந்த பெரேரா தெரிவித்தார்.

இவ்வாறு பதிவு செய்யப்பட்ட மரணங்களில் 19 வயதுக்குட்பட்ட 2,000 மரணங்களும் அடங்குவதாக அவர் குறிப்பிட்டார்.

வீதி விபத்துக்களைக் குறைக்கும் வகையில் ஜனாதிபதி செயலணி ஒன்று அமைக்கப்பட வேண்டுமெனவும் இலங்கை மருத்துவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

அத்துடன் வீதி விபத்துக்களைக் குறைப்பதற்கான விசேட ஆணைக்குழுவொன்றும் ஸ்தாபிக்கப்பட வேண்டும் என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் சுரந்த பெரேரா வலியுறுத்தினார். (அ)

# தனியார் வாகன இறக்குமதிக்கு நிபந்தனையுடன் அரசு அனுமதி

## வர்த்தமானி அறிவித்தல் வெளியீடு

கொழும்பு,பெப்.03

தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் ஒன்று ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, ஒவ்வொரு வாகனத்துக்கும் பொருந்தும் வகையில், இந்த வர்த்தமானி அறிவிப்பு நேற்று முன் தினம் முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதனடிப்படையில், மின்சாரத்தில் இயங்கும் வாகனங்கள், விசேட வாகனங்கள், வணிக மற்றும் பொருட்கள் போக்குவரத்து மற்றும் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான தடையை நீக்குவதற்கான வர்த்தமானி அறிவிப்பை ஜனாதிபதி வெளியிட்டுள்ளார்.

நாட்டில் இயல்பான பொருளாதார நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்கும் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார மேம்பாட்டு அமைச்சு பின்வரும் நிபந்தனைகளை விதித்துள்ளது.

மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்வதற்கு, இறக்குமதியாளர் அல்லது கொள்வனவாளர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட வரி செலுத்துவோர் அடையாள எண் (ரி.ஐ.என்.) அடங்கிய பிரமாணப் பத்திரம் உள்ளிட்ட ஏனைய அனைத்து தேவையான ஆவணங்களையும் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

ஓர் இறக்குமதியாளர் 90 நாட்களுக்குள் இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனத்தைப் பதிவு செய்யத் தவறினால், குறிப்பிட்ட மோட்டார் வாகனத்தைப் பதிவு செய்யும் போது மோட்டார் வாகனத்தின் விலை, காப்பீடு மற்றும் கப்பல் கட்டண பெறுமதி (சி.ஐ. எவ்.மதிப்பு) அதிகபட்ச வரம்பு 45 வீதத்துக்கு உட்பட்டு, இறக்குமதியாளர் மாதாந்திர சி. ஐ. எவ். மதிப்பில் 3 வீத தாமதக் கட்டணத்தைச் செலுத்த வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# நாட்டில் தொற்று நோய்களை விட கவனக்குறைவால் அதிக மரணம்!

கொழும்பு,பெப்.03

நாட்டில் தொற்று நோய்களை விடவும் எமது கவனக்குறைவால் ஏற்படக்கூடிய விபத்துகளால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று இலங்கை மருத்துவர் சங்கத்தின் விசேட மருத்துவ நிபுணர் சுரந்த பெரேரா தெரிவித்தார்.

உலகளாவிய ரீதியில் வருடாந்தம் 1.19 மில்லியன் பேர் வாகன விபத்துகள் காரணமாக உயிரிழக்கின்றனர்.

5 தொடக் கம் 29 வயதுக்கு இடைப்பட்ட இளம் வயதினரே இவ்வாறு அதிகளவில் விபத்துகளுக்கு ஆளாகின்றனர். இது கவலைக்குரிய விடயமாகும்.

வளர்ந்து வரும் நாடுகளில் உரிய நவீனத்துவத்துக்கமைய வீதிகள் அமைக்கப்படாமை, உரிய தரத்துக்கமைய வாகனங்கள் இறக்குமதி செய்யப்படாமை உள்ளிட்ட பல தொழில்நுட்ப காரணங்களால் விபத்துகள் சம்பவிக்கின்றன.

எதிர்வரும் காலங்களில் லொறியின் உடற்பாகத்தில் வடிவமைக்கப்படும் பேருந்துகளை கொள்வனவு செய்ய முடியாது. உரிய தரத்துக்கமைய வடிவமைக்கப்பட்ட பேருந்துகளை மாத்திரமே கொள்வனவு செய்ய முடியும்.

மேலும், வீதி விபத்துகளில் சிக்கி பலர் உடல் அவயங்களை இழக்க நேரிடுவதுடன், வாழ்நாள் முழுவதும் எழுந்து நடப்பதிலும் சிக்கல்கள் ஏற்படலாம். இதனால் விபத்துக்கு ஆளாகியவர் மாத்திரமல்ல, அவரது முழு குடும்பமும் பொருளாதார சுமை உள்ளிட்ட பல நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய சூழல் ஏற்படுகிறது-என்றார். (எ)

# மழை குறைவடையும்

கொழும்பு, பெப். 02

நாட்டில் தற்போது நிலவும் மழையுடனான வானிலை நேற்று முதல் குறையும் என்று எதிர்பார்க்கப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் சிறிதளவு மழை பெய்யக்கூடும் என அந்த திணைக்களம் அறிவித்துள்ளது.

அத்துடன் இரத்தினபுரி மற்றும் காலி மாவட்டங்களின் சில இடங்களில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஏனைய பகுதிகளில் பெரும்பாலும் மழையற்ற வானிலை நிலவக்கூடும்.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடமேல், ஊவா மற்றும் தென் மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளையில் பனி மூட்டமான வானிலை நிலவக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. (அ)

# கொள்கலன் விடுவிப்பது குறித்து 29 சங்கங்கள் அரக்கு ஆலோசனை

கொழும்பு, பெப். 02

இலங்கை வணிக சபை மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சபை உள்ளிட்ட 29 சங்கங்கள் இணைந்து கொழும்புத் துறைமுகத்தில் தேங்கியுள்ள கொள்கலன்களை விடுவிப்பது தொடர்பான கூட்டு யோசனைகளை அரசாங்கத்துக்கு முன்மொழிந்துள்ளன.

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்மொழிவுகள் மற்றும் எதிர்வரும் 3 முதல் 6 மாதங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்மொழிவுகள் என்பன இவ்வாறு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி, தேங்கியுள்ள கொள்கலன்களை முறையாக விடுவிப்பதற்காக அடுத்த இரண்டு வாரங்களுக்குள் விசேட சோதனை கருவி கட்டமைப்புகள் உருவாக்கப்படவேண்டும் என பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கொள்கலன்களுக்கு விரைவில் அனுமதிகளை வழங்குவதற்காக விரைவு அனுமதிக் குழுவை மீண்டும் கூட்ட வேண்டும் என குறித்த 29 சங்கங்களும் யோசனை முன்வைத்துள்ளன.

அதேநேரம், எதிர்வரும் 3 முதல் 6 மாதங்களுக்குள் கொள்கலன் வளாகத்தின் திறனை விரிவுபடுத்தவேண்டும் எனவும் முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன் கொழும்பு துறைமுகத்துக்கு அருகில் உள்ள பயன்படுத்தப்படாத கொள்கலன் வளாகங்களை அடையாளம் கண்டு இட நெருக்கடியை குறைப்பதற்கு அவற்றை பயன்படுத்த வேண்டுமென கோரப்பட்டுள்ளது.

அதேநேரம் கொழும்பு துறைமுகத்தின் சகல நடவடிக்கைகளும் டிஜிட்டல் மயமாக்கப்பட வேண்டும் எனவும் இலங்கை வணிக சபை மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க வர்த்தக சபை உள்ளிட்ட 29 சங்கங்கள் இணைந்து முன் வைத்துள்ள கூட்டு யோசனைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# நெருக்கடி ஏற்படுவதை தவிர்க்கவே வாகனங்களுக்கான வரி அதிகரிப்பு

## ஜனாதிபதி அநுரகுமார தெரிவிப்பு



கொழும்பு, பெப். 02

நாட்டில் மற்றுமொரு நெருக்கடி ஏற்படுவதைத் தவிர்க்கும் நோக்கிலேயே இறக்குமதியாகும் வாகனங்களுக்கான வரி அதிகரிக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

குருநாகல் - கல்கமுவ பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இதனைக் குறிப்பிட்டார்.

தனிப்பட்ட பாவனைக்கான வாகனங்களை இறக்குமதி செய்வதற்குப் பல வருடங்களின் பின்னர் மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனவும் இது மிகவும் நுட்பமாகவும் கவனமாகவும் செய்யப்பட வேண்டியதொரு செயற்பாடாகும் எனவும் அவர் கூறினார்.

அத்துடன் தற்போது, வாகனங்களின் விலை அதிகரித்தாலும், சில நாட்கள் செல்லும்போது அதனைக் குறைப்பதற்கும் அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மேலும் வாகன இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டிருந்த காலப்பகுதியிலும் சிலர் சட்டவிரோதமாக வாகனங்களை இறக்குமதி செய்து பயன்படுத்தியுள்ளனர் எனவும், அவ்வாறான நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் எதிர்வரும் நாட்களில் கைது செய்யப்படுவார்கள் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனிய மணல் அகழ்வு மூலம் வருமானம் பெற அரசு திட்டம்

## புல்மோட்டையில் அமைச்சர் சுனில் ஆராய்வு

திருகோணமலை, பெப்.03

**திருகோணமலை, புல்மோட்டையில் கனிய மணல் அகழ்வு மூலம் வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது. இது தொடர்பில் கைத்தொழில் துறைகள் மற்றும் தொழில் முயற்சியாண்மை அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான குழுவினர் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்.**



புல்மோட்டையில் உள்ள கனிய மணல் கூட்டுத்தாபனத்துக்கு அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான குழுவினர் நேற்று முன்தினம் சென்றனர். இதன்போது, கனிய மணல் அகழ்வுப் பணி மற்றும் இதன் மூலமான வருமானத்தை அதி கரித்து இலாபகரமான நிறுவ னமாக மாற்றுவதற்கான அனைத்துத் தரப்பினரதும் ஒத்துழைப்பு தொடர்பில் ஆராய்ந்தனர்.

குறித்த கூட்டுத்தாபன ஊழியர்களுடன் இதன் போது கலந்துரையாடலில் ஈடுபட்டு எதிர்கால அபிவிருத்தி தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன் முறையான மணல் அகழ்வை மேற்கொள்ளவும் வருமானத்தை அதிகரிக்கக் கூடிய பல விடயங்கள் தொடர்பிலும் ஆராயப்பட்டன.

குறித்த நிறுவனத்தில் உள்ள சகல தொழில் நுட்ப கனரக இயந்திரங்கள், தொழிற்சாலை உபகரணங்களையும் குறித்த குழுவினர் பார்வையிட்டார்.

வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புத் துறை பிரதியமைச்சர் அருண் ஹேமச்சந்திர, திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரொசான் அக்மீமன உட்பட பலரும் இந்த ஆய்வின் போது கலந்து கொண்டனர். (எ)

# கமநல சேவை நிலையத்தில் புலமைப்பரிசில் வழங்கல்




மட்டக்களப்பு, பெப்.03

பொங்கல் விழாவை சிறப்பிக்கும் முகமாக 26 விவசாய அமைப்புகளின் ஒருங்கிணைப்பில் வாழைச்சேனை கமநல சேவை நிலையத்தில் பொங்கல் விழாவும் புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வும் இரத்த தானம் என்பன நேற்று முன் தினம் நடைபெற்றன.

வாழைச்சேனை கமநல கேந்திர நிலையத்தின் கமநல அமைப்புகளின் தலைவர் எம். எல். எம். சித்திக் தலைமையில் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் கே. ஜெயக்காந்தனின் வழிகாட்டலில் இந்த நிகழ்வுகள் நடைபெற்றன.

இதன்போது, மாணவர்களுக்கு புலமைப் பரிசில் கொடுப்பனவு வழங்கப்பட்டது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கான உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

கமநல சேவை நிலையத்தில் சிறந்த முறையில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, குறித்த கமநல சேவை நிலை யத்தில் சிறந்த சேவையாற்றிய உத்தியோகத்தர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக மட்டக்களப்பு கமநல அபிவிருத்தி திணைக்கள பிரதி ஆணையாளர் கி. ஜெகன் நாத் கலந்து கொண்டார்.(எ)

# டெங்கு நுளம்பை கட்டுப்படுத்த காரைதீவில் நேற்றுக் களப்பணி



காரைதீவு, பெப்.03

டெங்கு நுளம்பை கட்டுப்படுத்தி பிரதேச மக்களை ஆபத்திலிருந்து மீட்க கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகிலா இஸ்ஸதீனின் வழிகாட்டலுக்கு அமைய காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி தஸ்லிமா வசீரின் தலைமையில் கொள்கலன் சேகரிப்பு பணி காரைதீவு மாவடிப்பள்ளி பிரதேசத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போது, காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர், பொதுச் சுகாதார பரிசோதகர்கள், நுளம்பு களத் தடுப்பு பிரிவினர்கள், சுற்றாடல் கழக மாணவர்கள், பிரதேச சபை ஊழியர்கள், நுளம்பு பெருகும் இடங்களை பரிசோதனை செய்து அகற்றினர். (எ)

# கிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் கிளீன் சிறீலங்கா திட்டம் முன்னெடுப்பு

திருகோணமலை, பெப். 03

கிழக்கு மாகாண ஆளுநர் ஜயந்தலால் ரத்னசேகர தலைமையில், திருகோணமலையில் உள்ள ஆளுநர் செயலகம் முன்பாகவுள்ள கரையோரப்பகுதி

புதிய அரசாங்கத்தின் கிளீன் சிறீலங்கா வேலைத் திட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் துப்புரவு செய்யப்பட்டது.

இதில் கடற்கரையோரம் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் சூழல் மாசடையாத வண்ணம் சுத்தம் செய்யப்பட்டு பிளாஸ்ரிக் கழிவுகள், பொலித்தீன் கழிவுகள் என அனைத்தும் அகற்றப்பட்டன. இதில் ஆளுநரின் செயலா ளர் ஜே. எஸ். அருள்ராஜ், திரு கோணமலை மாவட்ட செய லாளர் எம். ஜி. ஹேமந்த குமார உட்பட மாகாண சபைக்குட் பட்ட திணைக்களத் தலைவர் கள், உத் தியோகத்தர்கள் எனப்பலரும்கலந்து கொண்டனர்.

# தம்பலகாமம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல்

திருகோணமலை, பெப்.03

திருகோணமலை, தம்பலகாமம் படுகொலையின் 27ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 07.00 மணியளவில் தம்பலகாமம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத்தூபியில் உறவினர்கள் மற்றும் சமூக செயல்பாட்டாளர்களால் அனுஷ்டிக்கப்பட்டது. (எ)

# முன்னாள் எம். பி. கருணாகரம் பயணித்த வாகனம் விபத்து

## ஒருவர் மருத்துவமனையில் அனுமதி

திருகோணமலை, பெப்.03

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கோ. கருணாகரம் பயணித்த வாகனம் திருகோணமலை, உப்புவெளி பிரதேசத்தில் நேற்று முன்தினம் விபத்துக்குள்ளானது.

மட்டக்களப்பிலிருந்து தமிழ் அரசுக் கட்சியின் மறைந்த தலைவர் மாவை சேனாதிராசாவின் மரணச் சடங்கில் கலந்து கொள்வதற்காக பயணித்த போதே இந்த விபத்து இடம்பெற்றது.

வானின் பின்னால் பயணித்த மோட்டார் சைக்கிள் அதன் மீது மோதி இடம்பெற்ற விபத்தில் ஒருவர் காயமடைந்த நிலையில், மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை உப்பு வெளி வீதியில் சர்வோதயத்துக்கு முன்னால் உள்ள பாதசாரி கடவையில் பொதுமக்கள் கடக்கின்ற போது வானை நிறுத்திய வேளை, பின்னால் அதிக வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வானின் மீது மோதியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிள் செலுத்துநர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் உப்புவெளி பொ லிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)



# மூதூரில் உழவர் தின நிகழ்வு



திருகோணமலை, பெப்.03

மூதூர் - கங்குவேலி அகத்தியர் கலை மாமன்றத்தின் ஏற்பாட்டில் உழவர் தின நிகழ்வு நேற்று முன்தினம் காலை கங்குவேலி கிராமத்தில் நடைபெற்றது.

இதன்போது, மாணவ - மாணவிகளின் இன்னிசை நடனங்களுடன் விருந்தினர்கள் விழா மேடைக்கு அழைத்துவரப்பட்டனர்.

தமிழர் பாரம்பரியத்தை பறைசாற்றும் நடன நிகழ்வுகளும் நடைபெற்றன. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கு. குணநாதன் கலந்து சிறப்பித் தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகள் மீது அமெரிக்கா தாக்குதல்

மொகதிசு, பெப்.03

சோமாலியாவில் ஐ. எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது.

கிழக்கு ஆபிரிக்காவில் உள்ள நாடு சோமாலியா. இங்கு அல்கொய்தாவின் கிளை அமைப்பான அல் ஷபாப், ஐ. எஸ் போன்ற பல்வேறு பயங்கரவாத குழுக்கள் செயல்பட்டு வருகின்றன.

இந்த பயங்கரவாத குழுக்களை ஒழிக்கும் நடவடிக்கையில் அந்த நாட்டு பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டு வருகின்றனர். அதே நேரம் அமெரிக்க இராணுவமும், சோமாலிய பாது காப்புப் படையினருடன் இணைந்து பயங்கரவாத ஒழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், சோமாலியாவில் ஐ. எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா வான்வழித் தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் பலர் உயிரிழந்ததாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அதேவேளை, அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றபின் ஆபிரிக்காவில் அமெரிக்கா நடத்திய முதல் தாக்குதல் இது என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

# அமெரிக்க பொருட்களுக்கு 25வீத வரி விதித்தது கனடா

ஒட்டாவா, பெப்.03

**அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு கனடா 25 சதவீத வரி விதித்துள்ளது.**

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்றது முதல் அதிரடி நடவடிக்கையில் இறங்கியுள்ளார். பல்வேறு நாடுகள் மீதும் ட்ரம்ப் அதிரடி வரி விதிப்பில் ஈடுபட்டு வருகிறார்.

அந்த வகையில் கனடா, மெக்சிக்கோ ஆகிய நாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதமும், சீனாவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 10 சதவீதமும் வரி விதித்து ட்ரம்ப் உத்தரவிட்டுள்ளார். அந்த உத்தரவு நேற்று முன்தினம் முதல் அமுலுக்கு வந்துள்ளது.

இந்த நிலையில், அமெரிக்கா விதித்த இறக்குமதி வரிக்கு பதிலடி கொடுக்கும் வகையில் கனடாவும் வரி விதித்துள்ளது.

இதன்படி, அமெரிக் காவில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 25 சதவீதம் வரி விதிக்கப்படும் என்று கனடா அறிவித்துள்ளது. இந்த இறக்குமதி வரி நேற்று முதல் அமுல்படுத்தப்படும் என் றும் கனடா தெரிவித்துள்ளது. (எ)

# விமான விபத்துகளால் அமெரிக்காவில் அச்சம்



வாஷிங்டன், பெப்.03

அமெரிக்காவில் சிறிய ரக விமானம் தரையில் விழுந்து விபத்துக்குள்ளான சம்பவத்தில் 6 பேர் உயிரிழந்தனர்.

பென்சில்வேனியா மாகாணம் பிலடெல்பியா நகரில் விமான நிலையம் உள்ளது. இந்த விமான நிலையத்திலிருந்து சிறிய ரக விமானம் நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் மிசோரி மாகாணம் நோக்கிப் புறப்பட்டது. நோயாளியை வேறொரு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு செல்ல புறப்பட்ட அந்த விமானத்தில் 6 பேர் பயணித்தனர்.

இந்த நிலையில், விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்து தரையில் விழுந்து விபத்துக்குள்ளானது. இதனால், விமானம் வெடித்து தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 6 பேரும் உயிரிழந்ததாக தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 31 ஆம் திகதி அமெரிக்காவின் கன்சாஸ் மாகாணத்தில் பயணிகள் விமானமும், இராணுவ ஹெலிகொப்டரும் நடுவானில் நேருக்குநேர் மோதிய விபத்தில் 67 பேர் உயிரிழந்தனர். இவ்வாறு விமான விபத்துகள் அதிகரித்து வருவதால் அமெரிக்க மக்கள் மத்தியில் அச்சம் ஏற்பட்டுள்ளது. (எ)

## பாகிஸ்தானில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொலை

இஸ்லாமாபாத், பெப்.03

பாகிஸ்தானில் 4 பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் ஆட்சியைக் கைப்பற்றிய பிறகு பாகிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல் அதிகரித்துள்ளது. எனவே, எல்லையோர மாகாணங்களில் பாகிஸ்தான் இராணுவம் கண்காணிப்பை பலப்படுத்தியுள்ளது. இந்த நிலையில் கைபர் பக்துங்க்வா மாகாணத்தில் பயங்கரவாதிகள் நடமாட்டம் உள்ளதாக உளவுத்துறைக்கு தகவல் கிடைத்தது.

இதனையடுத்து, இராணுவத்தினர் அங்குள்ள தேரா இஸ்மாயில்கான் நகரில் ரோந்து சென்றனர். அப்போது, அங்கு பதுங்கியிருந்த 4 பயங்கரவாதிகள் சுட்டுக் கொல்லப்பட்டனர். பின்னர் நடத்திய விசாரணையில் அவர்கள் அனைவரும் தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. (எ)

# உக்ரைன்மீது ரஷ்யா ஏவுகணை தாக்குதல்

## ஐவர் உயிரிழந்தனர்

கீவ், பெப்.03

உக்ரைன் மீது ரஷ்யா ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல் நடத்தியதில் ஐவர் உயிரிழந்தனர்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் 2 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்து வருகிறது. இந்த போரில் உக்ரைனின் பல்வேறு பகுதிகளை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியது.

அதே சமயம், மேற்கத்திய நாடுகளின் இராணுவ மற்றும் பொருளாதார உதவியு டன் உக்ரைன் இராணுவம் போரை எதிர்கொண்டு வருகி றது.

இந்த நிலையில், உக்ரைனின் பெரிய நகரங்களில் இரவு நேரங்களில் ரஷ்யா ட்ரோன் மற்றும் ஏவுகணை தாக்குதல்கள் நடத்தி வருகிறது.

நேற்று ரஷ்யா உக்ரைனின் பொல் டாவா நகரத்தில் உள்ள ஓர் அடுக்குமாடி குடியிருப்பில் ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது.

இந்தத் தாக்குதலில் கட் டட இடிபாடுகளில் சிக்கி நால்வர் உயிரிழந்தனர். மேலும், 10 பேர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டனர். இதைத் தொடர்ந்து இடிந்து விழுந்த கட்டடத்திலிருந்து சுமார் 21 பேர் மீட்கப்பட் டனர்.

இதேவேளை, உக்ரைன் இராணுவத்தால் சுட்டு வீழ்த்தப்பட்ட ட்ரோன் இடிபாடுகளில் விழுந்ததில் பெண் ஒருவர் உயிரிழந்தார்.

இந்தத் தாக் குதலில் நேற்று மட்டும் ஐவர் கொல்லப்பட்டனர்.

ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைனும் ட்ரோன் தாக்குதல் நடத்தியது.

இதில் ரஷ்ய வான் பாதுகாப்புப் படையினர் 9 ட்ரோன்களை இடைமறித்து தாக்கி அழித்தனர். (எ)

# படையினர் - பயங்கரவாதிகள் துப்பாக்கி சண்டை! 30 பேர் பலி

இஸ்லாமாபாத், பெப்.03

பாகிஸ்தானில் படையினர் - பயங்கரவாதிகள் இடையே இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் 30 பேர் பலியாகினர்.


பாகிஸ்தானின் பலுசிஸ்தான் மாகாணத்தில் அரசுக்கு எதிராக செயல்படும் பயங்கரவாத குழுவினர் தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்களில் ஈடுபடுகின்றனர். பாதுகாப்பு படைகள் மீதும் பிற மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் மீதும் தொடர்ந்து தாக்குதல் நடத்துவதால் பதற்றம் ஏற்பட்டுள்ளது. அவர்களின் தாக்குதல் மற்றும் சதி திட்டங்களை படையினர் அவ்வப்போது முறியடித்து வருகின்றனர்.

அவ்வகையில், பலுசிஸ்தானின் காலட் மாவட்டம் மங்கோசார் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவில் பாதுகாப்பு படையினருக்கும் பயங்கரவாதிகளுக்கும் இடையே பயங்கர மோதல் ஏற்பட்டது. வீதியில் தடைகளை ஏற்படுத்த முயன்ற பயங்கரவாதிகளை படையினர் சுற்றி வளைத்தபோது இரு தரப்பினருக்கும் இடையே துப்பாக்கி சண்டை நடந்தது. இதில் பயங்கரவாதிகள் தரப்பில் 12 பேர் கொல்லப்பட்டனர். பாதுகாப்பு படை தரப்பில் 18 பேர் உயிரிழந்தனர்.

இத்த கவலை இராணுவத்தின் ஊடகப் பிரிவு நேற்றுத் தெரிவித்துள்ளது.

படையினர் மீதான தாக்குதலுக்கு எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை. தடை செய்யப்பட்ட தெஹ்ரீக்-இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பானது, அரசாங்கத்துடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை முறித்ததையடுத்து பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

# இஸ்ரேல் பணயக்கைதிகளை விடுதலை செய்தது ஹமாஸ்



காஸா முனை, பெப்.03

இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 3 பேரை ஹமாஸ் அமைப்பு விடுதலை செய்துள்ளது.

இஸ்ரேல், காஸா முனையை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பு இடையே ஓராண்டுக்கு மேல் நீடித்து வந்த போர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. இந்தப் போரில் ஆயிரக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இதனிடையே, போர் ஒப்பந்த அடிப்படையில் ஹமாஸ் தங்கள் வசம் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது. பணயக் கைதிகளுக்கு ஈடாக இஸ்ரேல் தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளை விடுதலை செய்ய ஒப்புக் கொண்டுள்ளது.

இதன்படி, முதற்கட்டமாக ஹமாஸ் தங்கள் பிடியில் உள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 33 பேரை விடுதலை செய்ய ஒப்புக்கொண்டது. இதற்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ்தீனிய கைதிகளில் 1,904 பேரை விடுதலை செய்ய இஸ்ரேல் ஒப்புக்கொண்டது.


தற்போதுவரை ஹமாஸ் தங்கள் பிடியில் இருந்த இஸ்ரேலியர்களில் 10 பேரை விடுதலை செய்துள்ளது.

இதற்கு ஈடாக பலஸ்தீனியர்கள் 300இற்கும் மேற்பட்டோரை இஸ்ரேல் விடுதலை செய்துள்ளது.

இந்த நிலையில், ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலிய பணயக் கைதிகளில் மேலும் 3 பேரை நேற்று விடுதலை செய்தனர். இதற்கு ஈடாக தங்கள் நாட்டு சிறைகளில் உள்ள பலஸ் தீனியர்களில் 183 பேரை இஸ்ரேல் விடுதலை செய்யவுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் தொடர் ஆஸி வசமானது இங்கிலாந்து அதிர்ச்சி தோல்வி!




மெல்பேர்ன், பெப்.03

இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா ஆஷஸ் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது.

இங்கிலாந்து - அவுஸ்திரேலியா மகளிர் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான ஆஷஸ் தொடரின் ஒரே ஒரு டெஸ்ட் போட்டி மெல்பேர்னில் கடந்த 31 ஆம் திகதி தொடங்கியது. இதில் நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா களத்தடுப்பை தெரிவு செய்தது.

இதன்படி, முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அவுஸ்திரேலிய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் 170 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக நாட் ஸ்கைவர் - பிரண்ட் 51 ஓட்டங்கள் அடித்தார். அவுஸ்திரேலியா தரப்பில் அலனா கிங் 4 விக்கெட்கள் வீழ்த்தினார்.

இதனையடுத்து முதல் இன்னிங்ஸை தொடங்கிய அவுஸ்திரேலியா சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. 2ஆவது நாள் முடிவில் 5 விக்கெட்களை மட்டுமே இழந்த அவுஸ்திரேலியா 422 ஓட்டங்கள் அடித்திருந்தது. பெத் மூனி 98 ஓட்டங்களுடனும், தஹ்லியா மெக்ராத் 9 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். அன்னாபெல் சதர்லேண்ட் 163 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

இதனையடுத்து 3ஆவது நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா மேற்கொண்டு 18 ஓட்டங்களுக்குள் எஞ்சிய 5 விக்கெட்களையும் இழந்து 440 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது. பெத் மூனி 106 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். இங்கிலாந்து தரப்பில் சோபி எக்லெஸ்டோன் 5 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 270 ஓட்டங்கள் பின்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய இங்கிலாந்து இம்முறையும் அவுஸ்திரேலிய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்களை இழந்தது. 68. 4 ஓவர்கள் தாக்குப்பிடித்த இங்கிலாந்து 2ஆவது இன்னிங்ஸில் 148 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் அவுஸ்திரேலியா இன்னிங்ஸ் மற்றும் 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஆஷஸ் டெஸ்ட் தொடரை கைப்பற்றியது. (எ)

## ஆஸி அசத்தல் வெற்றி இலங்கை சொதப்பல்

காலி, பெப்.03

இலங்கைக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றது.

காலியில் நடைபெற்ற இந்தப் போட்டியில்முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா தனது முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்களை இழந்து 654 ஓட்டங்கள் குவித்த நிலையில் ஆட்டத்தை இடைநிறுத்தியது. அதிகபட்சமாக கவாஜா 232 ஓட்டங்களும், ஸ்டீவ் சுமித் 141 ஓட்டங்களும், அறிமுக வீரர் ஜோஷ் இங்லிஸ் 102 ஓட்டங்களும் அடித்தனர்.

இலங்கை முதல் இன்னிங்ஸில் 165 ஓட்டங்களும், 2ஆவது இன்னிங்ஸில் 247 ஓட்டங்களும் எடுத்தது. இதனால் அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அசத்தல் வெற்றி பெற்றது.

இலங்கை தரப்பில் அதிகபட்சமாக 2ஆவது இன்னிங்ஸில் ஜெப்ரி வண்டர்சே 53 ஓட்டங்கள் எடுத்தார். அவுஸ்திரேலியா தரப்பில் குனமன், நாதன் லயன் ஆகியோர் தலா 4 விக்கெட்கள் வீழ்த்தினர். இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 1 - 0 என அவுஸ்திரேலியா முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி எதிர்வரும் 6ஆம் திகதி தொடங்குகிறது. (எ)

## 15 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி

புனே, பெப்.03

இங்கிலாந்துக்கு எதிரான 4ஆவது ரி - 20 போட்டியில் இந்தியா வெற்றி பெற்றது.இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 181 ஓட்டங்கள் குவித்தது. அதிகபட்சமாக ஹர்த்திக் பாண்டியா மற்றும் ஷிவம் டுபே இருவரும் தலா 53 ஓட்டங்கள் அடித்தனர். இங்கிலாந்து தரப்பில் அதிகபட்சமாக சாகிப் மக்மூத் 3 விக்கெட்கள் வீழ்த்தினார்.

பின்னர் 182 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய இங்கிலாந்து அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களான பில் சால்ட் மற்றும் பென் டக்கெட் இணைந்து வலுவான அடித்தளம் அமைத்து கொடுத்தனர். இருப்பினும், இந்திய பந்துவீச்சாளர்கள் கடும் நெருக்கடி கொடுத்தனர்.

ஒருபுறம் விக் கெட் சரிந்தாலும் மறுமுனையில் ஹாரி புரூக் அதி ரடியாக விளையாடி அணியை வெற்றிப்பா தைக்கு அழைத்து சென்றார். 25 பந்துகளில் அரைச்சதம் அடித்த அவர் 51 ஓட்டங் களில் வருண் சக்க ரவர்த்தியின் சூழலில் சிக்கினார். அதே ஓவரில் பிரை டன் கார்சின் விக்கெட்டையும் வருண் வீழ்த்தினார். பின்னர் களமிறங் கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழக்க இங் கிலாந்து அணி 19. 4 ஓவர்களில் 166 ஓட்டங்கள் அடித்த நிலையில் சகல விக்கெட்களையும் இழந்தது. (எ)

## டெஸ்ட் சம்பியன்ஷிப் பட்டியலில் மாற்றம்

டுபாய், பெப்.03

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வி காரணமாக 6ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது இலங்கை. இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள அவுஸ்திரேலிய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. இரு அணிகளுக்கும் இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டி காலி மைதானத்தில் கடந்த 29ஆம் திகதி தொடங்கி நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

இதில் அவுஸ்திரேலிய அணி இன்னிங்ஸ் மற்றும் 242 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்நிலையில், இந்த ஆட்டம் முடிந்த பின்னர் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலை சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ.சி.சி) வெளியிட்டுள்ளது.

இதன்படி, இந்தப்பட்டியலில் தென்னாபிரிக்கா (69.44 சதவீதம்) முதல் இடத்திலும், அவுஸ்திரேலியா (65.74 சதவீதம்) 2ஆவது இடத்திலும், இந்தியா (50.00 சதவீதம்) 3ஆவது இடத்திலும், நியூசிலாந்து (48.21 சதவீதம்) 4ஆவது இடத்திலும் உள்ளன. 5ஆவது இடத்தில் இருந்த இலங்கை (41.67 சதவீதம்), அவுஸ்திரேலியாவுக்கு எதிரான தோல்வி காரணமாக 6ஆவது இடத்துக்கு சரிந்துள்ளது.

இதன் காரணமாக இங்கிலாந்து (43.18 சதவீதம்) 5ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. (எ)

## சச்சினுக்கு விருது




மும்பை, பெப். 03

பி. சி. சி. ஐயின் வாழ்நாள் சாதனையாளருக்கான விருது சச்சினுக்கு வழங்கப்பட்டது.இந்திய கிரிக்கெட் சபை ஆண்டுதோறும் சிறந்த இந்திய வீரர், வீராங்கனைக்கு விருது வழங்கி கௌரவித்து வருகிறது. இதன்படி 2024ஆம் ஆண்டுக்கான விருது வழங்கும் விழா மும்பையில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்றது. இதில் வாழ்நாள் சாதனையாளருக்கான சி. கே. நாயுடு விருது இந்திய ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கருக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் உரையாற்றிய சச்சின் இளம் வீரர்களுக்கு கொடுத்த அறிவுரை வருமாறு, "கிரிக்கெட் இல்லாமல் நாம் அனைவரும் இங்கே வந்திருக்க மாட்டோம். அதனால் அதுவே என்னுடைய வாழ்க்கையின் மிகப்பெரிய பரிசு. உங்களிடம் இருக்கும் துடுப்பு மட்டை, பந்தை நீங்கள் திடமாக பிடிக்கவில்லையெனில் உங்களுடைய கிரிக்கெட் வாழ்க்கையை மெதுவாக இழக்க ஆரம்பிப்பீர்கள். அதற்காக கவனத்துடன் இருங்கள் என்று நான் சொல்ல மாட்டேன். நமது வாழ்வில் சில கவன சிதறல்கள் இருக்கும்.

ஆனால், அது உங்களுடைய கிரிக்கெட் வாழ்க்கையை பாதிக்க விடாதீர்கள். அது நாம் அவற்றை எவ்வாறு கையாள்கிறோம் என்பதை பொறுத்தது. நம்மிடம் உள்ள அனைத்தையும் மதித்து, உங்கள் விளையாட்டை கவனித்துக் கொள்ளுங்கள். நாங்கள் அனைவரும் சமாளித்துவிட்டோம். எங்களிடம் எதுவும் இல்லை. நம்மிடம் எல்லாம் இருக்கும்போது அதை மதிப்பது முக்கியம். மேலும், விளையாட்டை எடுத்துச் செல்லவும், நாட்டின் பெயரை முன்னோக்கி கொண்டு செல்லவும் பொருத்தமான முறையில் நடந்து கொள்வது முக்கியம்"- என்றார். (எ)

## ஓய்வு பெற்றார் சஹா

மும்பை, பெப்.03


நடப்பு ரஞ்சி தொடரோடு கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதாக விருத்திமான் சஹா அறிவித்துள்ளார்.

இந்திய அணியின் முன்னணி விக்கெட் காப்பாளர் - துடுப்பாட்ட வீரர் விருத்திமான் சஹா (வயது- 40) அனைத்து வித கிரிக்கெட் போட்டிகளில் இருந்தும் ஓய்வை அறிவித்தார். இவர் இந்திய அணிக்காக 40 டெஸ்ட் மற்றும் 9 ஒருநாள் போட்டிகளில் விளையாடியுள்ளார். மகேந்திர சிங் டோனியின் ஓய்வுக்குப்பின் இந்திய அணியில் நிலையான இடம்பிடித்தார்.

இருப்பினும் கே. எல். ராகுலின் வருகை மற்றும் மாசமான துடுப்பாட்டம் காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்டார். விருத்திமான் சஹா கடைசியாக 2021ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் இடம்பெற்றிருந்தார். அதன்பின் அணியில் இடம் கிடைக்கவில்லை.

இந்த நிலையில் தற்போது நடைபெற்று வரும் ரஞ்சி தொடரோடு அனைத்து வித கிரிக்கெட்டிலிருந்தும் (ஐ. பி. எல். உட்பட) ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

இவர் ரஞ்சி தொடரில் பெங்கால் அணிக்காக விளையாடி வந்தார். நேற்று முடிந்த பெங்கால் - பஞ்சாப் இடையேயான ஆட்டத்தோடு கிரிக்கெட்டிலிருந்து சஹா விடை பெற்றுள்ளார். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூராட்சி...

ரூபாயை கூட உரிய நேரத்தில் வழங்க முடியவில்லை.

ஒரு சாராருக்கு 15,000 ரூபா என்றும் மற்றுமொரு சாராருக்கு 10,000 ரூபா என்றும் வழங்கப்பட்டுள்ளதே தவிர 25000 ரூபா இன்னும் மொத்தமாக போய் சேரவில்லை.

நாடு வங்குரோத்து நிலையை எட்டியதோடு நாட்டின் பெரும்பாலான மக்களின் ஜீவனோபாயம் வீழ்ச்சி கண்டன. பலர் வறுமை நிலையை அடைந்தனர். இன்றும் நம் நாட்டில் வறுமையை ஒழிப்பதற்கான தெளிவான திட்டமொன்று இல்லை. தற்போதைய அரசாங்கமும் ஆட்சிக்கு வந்த பிறகு முறையான திட்டத்தை செயல்படுத்தாது, தற்காலிக நிவாரணங்களை வழங்கி வருகிறது. எனவே குறிப்பிட்ட காலத்திற்குள் இந்த ஏழ்மையை போக்குவதற்கான இலக்குடனான திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி மன்ற சேவைகள் இன்றும் கூட நடந்தபாடில்லை. எனவே நடக்கப்போகும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் மிகவும் முக்கியமானது. கிராமத்தை பாதுகாக்கவும் நகரத்தை பாதுகாக்கவும் மக்கள் நம்பிக்கை வைக்கும் திறமையான வேட்பாளர்களை நாம் களமிறக்குவோம். மக்கள் ஆதரவோடு நாம் வெற்றி பெற வழிவகுப்போம். இதனூடாக பிரச்னைகளுக்கு முறையான தீர்வுகளை பெற்றுக்கொடுப்போம் - என்றார். (அ)

## ஜெனிவாவுக்கு...

நீடிக்கும் தீர்மானத்தை நிராகரிக்கவும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநயக்க தலைமையிலான அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் இறுதி அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட தீர்மானத்தின் நகல்வடிவை நிராகரிப்பதற்கு ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க தலைமையில் கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டது.

இதேவேளை, உள்நாட்டு பொறிமுறை மூலம் நல்லிணக்கம் மற்றும் மனித உரிமை பிரச்சினைகளுக்கு தீர்வை காண்பதற்கு அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக உறுதியளித்துள்ளது. ஆனால் ஜெனிவா தீர்மானத்தில் உள்ள பல விடயங்களை ஏற்றுக் கொள்ள முடியாது என்றும் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறானதொரு நிலையில், இறுதிக் கட்ட போரில் இடம் பெற்றதாக கூறப்படுகின்ற பாரதூரமான மனித உரிமைகள் மீறல் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையிலான நேர்மையான அறிக்கையை கூடிய விரைவில் அரசாங்கம் முன்வைக்க உள்ளதாக தெரிவித்திருந்தது. இந்த அறிக்கையானது ஜெனிவாவுக்கு பதிலளிப்பதாக அல்லாது எமது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேசத்துக்கு வெளிப்படுத்துவதாகவே அமையும் என அரசாங்கம் குறிப்பிட்டிருந்தது.

புதிய அரசாங்கத்தின் முன்னெடுப்புகளுக்கு சர்தேசத்தின் ஒத்துழைப்புகளை ஜெனிவாவில் கோரவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. குறிப்பாக தமிழ் மக்களின் பிரச்சனைகள் குறித்து அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பிரதிபலிக்கும் வகையிலேயே சிறப்பறிக்கை அமைய உள்ளதாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் குறிப்பிட்டிருந்தார்.

விசேட இராஜதந்திர குழு ஊடாக தயாரிக்கப்பட்டுள்ள இந்த சிறப்பறிக்கையானது தற்போது நிறைவுபடுத்தப்பட்டுள்ளதுடன், அந்த அறிக்கையுடனேயே அமைச்சர் விஜித ஹேரத் தலைமையிலான குழு ஜெனிவா செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

## உயர்நீதிமன்ற...

ஆம் ஆண்டு மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவிருந்தது. எனினும், போதியளவு நிதி ஒதுக்கீடுகள் இல்லாத காரணத்தினால் தேர்தல் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

எவ்வாறெனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8ஆம் திகதி நடத்துவதற்கு அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## கோழி இறைச்சி...

வரையிலும், ஒரு கிலோகிராம் கோழி இறைச்சியின் விலை 650 - 850 வரையிலும் விற்பனை செய்யப்படுவதாகச் சந்தை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

முட்டை மற்றும் கோழி உற்பத்தி அதிகரித்துள்ளதாலும், அதன் தேவை குறைந்ததாலும் விலைகள் வீழ்ச்சி அடைந்துள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, சிறப்பு அங்காடிகளில் 10 முட்டைகள் கொண்ட ஒரு பொதி 500 - 520 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுவதாகவும் நுகர்வோர் கூறியுள்ளனர்.

அத்துடன் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 600 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாகவும் கூறப்படுகிறது. (அ)

## மாவையின்...

தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன கலந்துகொண்டதுடன் சசிகலா ரவிராஜினால் ரணில் விக்கிரமசிங்கவின் இரங்கல் உரை வாசிக்கப்பட்டது.

மேலும் இறுதி அஞ்சலி நிகழ்வில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் ரிஷாத் பதியுதீன், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறிகாந்தா, ஈ.பி.ஆர்.எல்.எவ் அமைப்பின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், ரெலோ சார்பில் அதன் பேச்சாளர் குருசுவாமி சுரேந்திரன், தமிழ் மக்கள் கூட்டணியை சேர்ந்த யாழ்.மாநகர முன்னாள் முதல்வர் மணிவண்ணன், பாராளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், ஞா.சிறிநேசன், சண்முகம் குகதாசன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.கே.சிவாஜிலிங்கம், பா.அரியநேத்திரன், சி.சிவமோகன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொது அமைப்பினர், மத குருமார்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் என பலர் கலந்துகொண்டு இறுதி அஞ்சலி செலுத்தினர்.

1942 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 27ஆம் திகதி பிறந்த மாவை சேனாதிராசா வீட்டில் தவறி விழுந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலனின்றி கடந்த 29ஆம் திகதி காலமானார்.

அவருக்கு வயது 82.

இலங்கைத் தமிழர் அரசியலில் மிகப்பெரும் ஆளுமையான மாவையின் மறைவு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியது.

20 ஆண்டுகளுக்கு மேல் பாராளுமன்ற உறுப்பினராக பணியாற்றிய அவர் 07 ஆண்டுகளுக்கு மேல் சிறைவாசம் அனுபவித்துள்ளார்.

2014 இல் சேனாதிராசா இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டு 2024 ஆம் ஆண்டுவரை கட்சியின் தலைவராக நீடித்தார்.

இலங்கை தமிழரசு கட்சியின் மிக நெருக்கடியான காலங்களில் தலைவராகப் பணியாற்றி கட்சியை கொண்டு செல்வதற்கு பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்ட ஒரு உன்னதமான நபர் ஆவார்.

அவரின் மறைவு தமிழ்த் தேசியப் பரப்பில் பெரும் வெற்றிடத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் மிகையாகாது. (அ)

# லண்டனில் சிறப்புரை ஆற்றவுள்ளார் ரணில்!

கொழும்பு, பெப். 03

விசேட கலந்துரையாடல் ஒன்றில் பங்கேற்பதற்காக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

நமது காலத்தில் பெரும் பிரச்னைகளைக் கையாளுதல் என்ற தொனிப்பொருளில் இடம்பெறவுள்ள கலந்துரையாடலில் பங்கேற்பதற்காகவே அவர் இன்று லண்ண்டனுக்கு பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

குறித்த கலந்துரையாடல் லண்டன் - கொன்வே மண்டபத்தில் நாளை மறுதினம் புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

பொருளாதார ரீதியில் பாதாளத்தில் வீழ்ந்த இலங்கையின் மறுமலர்ச்சி திட்டம், ஊழல் மோசடி, மனித உரிமை மீறல் நெருக்கடிகளை எதிர்கொள்ளல் மற்றும் 2019 ஆம் ஆண்டில் இஸ்லாமிய அடிப்படைவாதிகளினால் முன்னெடுக்கப்பட்ட உயிர்த்த ஞாயிறு தின தாக்குதல்கள் போன்ற விடயங்கள் குறித்து ரணில் விக்கிரமசிங்க இந்த நிகழ்வில் சிறப்புரை ஆற்ற உள்ளார்.

இதனை தொடர்ந்து லண்டனில் தங்கியிருக்கும் நாட்களில் பல்வேறு அரசியல் சந்திப்புகளிலும் பங்கேற்க உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# சட்டவிரோதமாக இறக்குமதி செய்த இஞ்சித் தொகையுடன் நால்வர் கைது

கொழும்பு, பெப். 02

சட்டவிரோதமாக நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்ட இஞ்சித் தொகையுடன் நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சந்தேகநபர்கள் நேற்றுக் காலை கற்பிட்டி பொலிஸ் பிரிவில் கந்தகுடாவ கற்பிட்டி பகுதியில் வைத்து பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 1,839 கிலோகிராம் இஞ்சி தொகை மீட்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், மதுரங்குளி மற்றும் புத்தளம் பகுதிகளை சேர்ந்த 18, 34, 37 மற்றும் 44 வயதுடையவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அதானியின்...

உட்பட அதானி காற்றாலை மின் திட்டத்தின் பல அம்சங்களை மறு மதிப்பீடு செய்யவுள்ளன.

மன்னார் மற்றும் பூநகரியில் 484 மெகாவோட் காற்றாலை மின்சாரத் திட்டத்தில் அதானி குழுமம் தற்போது 1 பில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## முதல்...

தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நிஷாந்த சமரவீர தெரிவித்தார்.

எதிர்வரும் 20 ஆம் திகதி தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

கோப் குழுவை பிரதிநிதித்துவப்படுத்தும் ஆளுங்கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கை 15 ஆகும்.

எவ்வாறாயினும், எதிர்க்கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி இதுவரை எவரும் பெயரிடப்படவில்லை. (அ)

## தூதுவர்களை...

ஆஸ்திரேலியாவின் கான்பராவில் தூதுவராக பொறுப்பேற்க வாய்ப்புள்ளது.

அதே நேரத்தில் 2011 முதல் 2014 வரை இந்தியாவுக்கான துணை தூதுவராக இருந்த மகேசினி கொலன்னே புதுடில்லியில் தூதுவராக நியமிக்கப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இருப்பினும், வெளிநாடுகளில் உள்ள இலங்கையின் பல தூதரகங்களுக்கு தொழில் நிபுணத்துவம் இல்லாத அரசியல் நியமனங்களும் வழங்கப்பட வாய்ப்புக்கள் உள்ளன.

அவர்களில் ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் கல்வியாளரான பேராசிரியர் ஜனக் குமாரசிங்கவும் ஒருவராவார்.

அண்மையில் ஓய்வு பெற்ற இலங்கை விமானப்படைத் தளபதி எயார் வைஸ் மார்சல் உதேனி ராஜபக்ஷவும் பதவி ஒன்றில் அமர்த்தப்படவுள்ளார்.

இந்தநிலையில் பெயர்கள் இறுதி செய்யப்பட்டு வருவதாக வெளியுறவு அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார். (அ)

## நட்டத்தில்...

ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டிருந்த குழுவின் பரிந்துரைகளுக்கு ஏற்ப இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான ஆரம்ப செயற்பாடுகள் இன்னும் இரண்டு வாரங்களுக்குள் முன்னெடுக்கப்படவுள்ளதாகவும் குறிப்பிடப்படுகின்றது. (அ)

## மகிந்தவுக்கு...

இந்தக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உள்ளிட்டவர்களுடன் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும் பங்கேற்றிருந்தார் என அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் முன்னாள் ஜனாதிபதி ரணில் இந்த விடயத்தை தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வீடு வழங்குவதற்கு அரசாங்கம் சட்ட ரீதியாக கடப்பாடுடையது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி பங்கேற்ற கூட்டமொன்றில் மகிந்த ராஜபக்ஷவின் இல்லம் குறித்து தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் இது சட்ட ரீதியான தீர்மானம் எனவும் ரணில் தெரிவித்தார். (அ)

## கடவுச்சீட்டு...

வரும் நிலையேற்பட்டுள்ளது.

நம் நாட்டின் வரலாற்றில் உலக வங்கி வழங்கிய அதிகூடிய தொகையொன்றை அடுத்த வருடமளவில் இந்நாட்டு விவசாயத்துறை அபிவிருத்திக்காக வழங்க உள்ளது.

அதேபோன்று கடவுச்சீட்டு நெருக்கடியை தீர்ப்பதற்கும் நாங்கள் விரைவில் நடவடிக்கை மேற்கொள்வோம்.

விரைவில் 24 மணிநேரமும் கடவுச்சீட்டு அலுவலகத்தை செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம்.

அதற்காக ஓய்வு பெற்றுள்ள ஊழியர்களை மீண்டும் தற்காலிக அடிப்படையில் சேவையில் இணைத்துக் கொள்ள தீர்மானித்துள்ளோம்.

அதன் ஊடாக விரைவில் கடவுச்சீட்டு பெறுவதில் உள்ள நெருக்கடிகளை தீர்த்து வைப்போம் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கான நிதி ஒதுக்கீட்டை பட்ஜெட்டில் அதிகரித்தது இந்தியா

## இலங்கை ரூபாயில் சுமார் 1032 கோடி

புதுடில்லி, பெப். 02

**இந்தியாவின் வரவு-செலவுத் திட்டத்தில் இலங்கைக்காக 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.**

இந்திய மத்திய அரசாங்கத்தால் நேற்று முன்தினம் 2025 - 2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தாக்கல் செய்யப்பட்டது.

நிதியமைச்சர் என்ற வகையில் நிர்மலா சீதாராமன் இந்த வரவு-செலவுத் திட்டத்தை முன்வைத்த துடன், அவர் தாக்கல் செய்த 08ஆவது வரவு - செலவுத் திட்டம் இதுவாகும்.

இதில் இந்திய வெளியுறவு அமைச்சுக்காக 20,516 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன் மூலம் வெளிநாடுகளுக்கு உதவிகளை வழங்குவதற்காக 5,483 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்டை நாடுகளில் நீர் மின் நிலையங்கள், வீட்டு வசதி, வீதிகள், பாலங்கள் மற்றும் ஒருங்கிணைந்த சோதனைச் சாவடிகள் போன்ற பாரிய உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக இந்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

இதன்படி இலங்கைக்கு இந்தியாவின் வரவு - செலவு திட்டத்தின் ஊடாக 300 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது இலங்கை ரூபாயில் சுமார் 1032 கோடியாகும்.

இலங்கை, பொருளாதார மந்த நிலையிலிருந்து மீண்டு வருவதால், அதற்கான ஒதுக்கீடு 245 கோடியிலிருந்து 300 கோடி இந்திய ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் இந்திய வரவு - செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளுக்கான நிதி ஒதுக்கீடுகளில் பூட்டான் நாட்டுக்கே அதிகளவான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அந்நாட்டுக்காக 2025-2026ஆம் ஆண்டுக்காக 2,150 கோடி இந்திய ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தொலைத்தொடர்பு கோபுரத்திலிருந்து வீழ்ந்த இளைஞன் பரிதாபமாக மரணம்

வவுனியா, பெப். 03

வவுனியா, மகாறம்பைக்குளத்தில் அமைந்துள்ள தொலைத் தொடர்பு கோபுரத்தில் இருந்து வீழ்ந்த ஒருவர் உயிரிழந்துள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் அனுராதபுரம், நிக்கவரெட்டி பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய சத்துரங்க ஹேரத் என்ற இளைஞனே பலியாகியுள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றது.

குறித்த பகுதியில் அமைந்துள்ள தொலைத்தொடர்பு கோபுரத்தில் ஏறி திருத்தப்பணிகளை முன்னெடுத்துவந்த ஊழியர் ஒருவர் நிலை தடுமாறி கீழே வீழ்ந்துள்ளார்.

இதனால் படுகாயமடைந்த அவர், வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

# வருடாந்தம் 500 ரூபா பில்லியன் இழப்பைச் சந்திக்கின்றது நாடு!

## தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம்

கொழும்பு, பெப். 03

முறையான பொதுப் போக்குவரத்து முறையின்மையால் நாடு வருடாந்தம் 500 ரூபா பில்லியன் இழப்பை சந்திக்கிறது எனவும் வாகன இறக்குமதி மீதான தடைகள் தளர்த்தப்பட்டவுடன் இந்த இழப்பு இரட்டிப்பாகும் எனவும் தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

புதிய கார்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்களின் இறக்குமதியால் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். அதனால் ஏற்படும் செலவுகள் மீண்டும் நாட்டுக்கு சுமையாக மாறும்.

இறக்குமதி செய்யப்படும் பஸ்களுக்கு அதிக வரி விதிக்கப்பட்டுள்ளதால், ஆண்டு தோறும் ஜூலை மாதம் பஸ் கட்டணம் உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தற்போது, மக்கள் தொகையில் கால் பகுதியினர் பொது போக்குவரத்தை நம்பியுள்ளனர், பலர் தனியார் வாகனங்களைப் பயன்



படுத்துகின்றனர்.

இந்த சவால்களை எதிர்கொள்ள, உயர்தர பேருந்துகளின் இறக்குமதியை உறுதி செய்யும் அதே வேளையில், பொதுப் போக்குவரத்து அமைப்பை மேம்படுத்த வேண்டியது அவசியம் - என்றார்.

# போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 சாரதிகள் மீது நடவடிக்கை

கொழும்பு, பெப். 03

போக்குவரத்து விதிகளை மீறிய 31,905 வாகன சாரதிகள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நாடுமுழுவதும் உள்ள 607 பொலிஸ் நிலையங்களில் உள்ள பொலிஸாரினரால் கடந்த ஜனவரி மாதம் 11 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்ட சோதனைகளில் குறித்த நபர்கள் கைது செய்யப்பட்டு, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன்போது மது அருந்தி வாகனம் செலுத்திய குற்றத்தின் கீழ் 3,876 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய குற்றத்தில் 190 சாரதிகள் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# சகோதரன் தவறுதலாக விழுந்து ஆறு மாதக் குழந்தை உயிரிழப்பு!

கொழும்பு, பெப். 02

வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஆறு மாதக் குழந்தை ஒன்று தனது மூத்த சகோதரனால் நசுக்கப்பட்டு உயிரிழந்துள்ளதாக தெற்கு களுத்துறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை தெற்கு, வெனிவெல்கெட்டிய பகுதியைச் சேர்ந்த விஹுலை திஹாசா என்ற குழந்தையே உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் தூங்கிக் கொண்டிருந்த போது, மூத்த சகோதரன் அந்த குழந்தையின் மீது தவறுதலாக விழுந்ததில் மூச்சுத் திணறடிக்கப்பட்டதால், களுத்துறை நாகொட குழந்தைகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் குழந்தை இறந்துவிட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிப்பு

கொழும்பு, பெப். 03

டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

ஜனவரி மாதத்தில் மாத்திரம் 4,943 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு மாவட்டத்திலேயே அதிக எண்ணிக்கையிலான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

இதன்படி, கொழும்பு மாவட்டத்தில் 1,382 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் 764 டெங்கு நோயாளர்களும், காலி மாவட்டத்தில் 315 டெங்கு நோயாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர். (அ)

# 88 தேசிய பாடசாலைகளில் தரம் 1 அதிபர்கள் இல்லை!

கொழும்பு, பெப். 03

நாடளாவிய ரீதியில் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான பற்றாக்குறை நிலவுவதாகக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டிலுள்ள 88 தேசிய பாடசாலைகளில் அதிபர் சேவை தரம் ஒன்றுக்கான பற்றாக்குறை நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், தகுதி வாய்ந்த 79 அதிபர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவார்கள் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்கான, நேர்முகத்தேர்வு எதிர்வரும் 06ஆம் திகதி முதல் 11ஆம் திகதி வரை இசுருபாயவில் இடம்பெறவுள்ளது. (அ)

# சுதந்திர தின பாதுகாப்பு பணியில் 1650 பொலிஸார்

கொழும்பு, பெப். 03

77ஆவது சுதந்திர தின விழா மற்றும் ஒத்திகை நடவடிக்கைகளின்போது, பாதுகாப்புப் பணிகளுக்காக பொலிஸ் மற்றும் பொலிஸ் சிறப்பு அதிரடிப்படை அதிகாரிகள் 1,650 பேர் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

போக்குவரத்துக்கோ அல்லது பொதுமக்களுக்கோ இடையூறு ஏற்படாத வகையில் ஒத்திகை மற்றும் நிகழ்வை எளிதாக்கும் வகையில் சிறப்பு போக்குவரத்துத் திட்டமும் நடைமுறையில் உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதன்படி, சுதந்திர தின கொண்டாட்ட ஒத்திகைக்கு தயாராகும் வகையில், கொழும்பு சுதந்திர சதுக்கத்தை அண்மித்த பகுதியில் சிறப்பு போக்குவரத்து திட்டம் செயற்படுத்தப்படும்.

இந்த நேரத்தில் மாற்று வழிகளைப் பயன்படுத்துமாறு பொலிஸார் பொதுமக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# கடலலையில் சிக்கிய தாயும் மகளும் மீட்பு!

கொழும்பு, பெப். 03

ஹிக்கடுவையில் கடல் அலையில் சிக்கிய தாயும் மகளும் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் ஹிக்கடுவ, நாரிகம கடற்பரப்பில் நேற்று முன் தினம் மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாரிகம கடற்பரப்பில் தாயும் மகளும் நீராடச்சென்ற வேளை அலையில் சிக்குண்டு அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். இது தொடர்பில் கடற்கரைப் பாதுகாப்பு பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பொலிஸ் உத்தியோகத்தர்களான பிரேமகுமார, கணிஷ்க, திசாநாயக்க, ஜயசிங்க ஆகியோர் இணைந்து இருவரையும் காப்பாற்றியுள்ளனர்.

ஹிக்கடுவை பகுதியைச் சேர்ந்த 42 வயதான தாயும் 14 வயதுடைய மகளுமே இவ்வாறு காப்பாற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்தது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.02.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் அமைந்துள்ள ஈழநாடு அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org